# تَفْسِيرُ سُورَةِ الْحُجُرَاتِ

# சூரத்துல் ஹுஜுராத்தின் விளக்கம்

ஹுஜுராத் என்பது அறைகள் எனற கருத்தைக் கொண்ட, ஹுஜ்ரத் என்ற ஒருமை சொல்லின் பன்மை சொல்லாகும்.

இந்த சூரா மதீனாவில் இறங்கிய, 18 வசனங்களைக் கொண்ட, மதனீ சூராவாகும்.

இந்த சூரா ஒரு முஸ்லிமின் அகீதா, சமூக வாழ்க்கை, தனி மனித வாழ்க்கை, சகோதரத்துவம், மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கான ஆலோசனை சார்ந்த பல முக்கிய விடயங்களை சுமந்திருக்கும் ஒரு சூராவாகும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُقَدِّمُوا بَيْنَ يَدَيِ اللَّهِ وَرَسُولِهِ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ (1) يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَرْفَعُوا أَصْوَاتَكُمْ فَوْقَ صَوْتِ النَّبِيِّ وَلَا تَجْهَرُوا لَهُ بِالْقَوْلِ كَجَهْرِ بَعْضِكُمْ لِبَعْضٍ أَنْ تَحْبَطَ أَعْمَالُكُمْ وَأَنْتُمْ لَا تَشْعُرُونَ (2) إِنَّ الَّذِينَ يَغُضُّونَ أَصْوَاتَهُمْ عِنْدَ رَسُولِ اللَّهِ أُولَئِكَ الَّذِينَ امْتَحَنَ اللَّهُ قُلُوبَهُمْ لِلتَّقْوَى لَهُمْ مَغْفِرَةٌ وَأَجْرٌ عَظِيمٌ (3)

மு∴மின்களே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முன்னர் நீங்கள் முந்தாதீர்கள்; அல்லாஹ்விடம் பயபக்தியுடன் இருங்கள்; நிச்சயமாக அல்லாஹ் செவியுறுபவன்; நன்கறிபவன்.49:1, மு∴மின்களே! நீங்கள் நபியின் சப்தத்திற்கு மேலே, உங்கள் சப்தங்களை உயர்த்தாதீர்கள்; மேலும், உங்களுக்குள் ஒருவர் மற்றொருவருடன் இரைந்து பேசுவதைப் போல், அவரிடம் நீங்கள் இரைந்து போசாதீர்கள், (இவற்றால்) நீங்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையில் உங்கள் அமல்கள் அழிந்து போகும்49:2, நிச்சயமாக, எவர்கள் அல்லாஹ்வுடைய தூதரின் முன்பு, தங்களுடைய சப்தங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்களோ அ(த்தகைய)வர்களின் இதயங்களை அல்லாஹ் பயபக்திக்காகச் சோதனை செய்கிறான் - அவர்களுக்கு மன்னிப்பும், மகத்தான கூலியும் உண்டு.49:3,(நபியே!) நிச்சயமாக, எவர்கள் (உம்) அறைகளுக்கு வெளியே இருந்து உம்மை இரைந்து அழைக்கிறார்களோ, அவர்களில் பெரும்பாலோர் விளங்கிக் கொள்ளாதவர்களே!49:4, நீர் அவர்களிடம் வெளிப்பட்டு வரும் வரையில், அவர்கள் பொறுத்திருந்தார்களானால், அது அவர்களுக்கு நலமாக இருக்கும்; (எனினும்) அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன்.49:5

இந்த ஐந்து வசனங்களும் இறங்குவதற்கு காரணமாக இருந்த நிகழ்வு (ஸபபுன் நுசூல்)

இப்னு அபீ முலைக்கா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: (ஒருமுறை) நல்லவர்களான அபூ பக்ர்(ரலி) அவர்களும் உமர்(ரலி) அவர்களும் அழிவில் சிக்கிக்கொள்ள இருந்தார்கள். பனூ தமீம் குலத்தைச் சேர்ந்த பயணக் குழுவினர் நபி(ஸல்) அவர்களிடம் (தங்களுக்கு ஒரு தலைவரை நியமிக்கும்படி கோரியவர்களாக) வந்தபோது நபி(ஸல்) அவர்களுக்கு அருகில் அவர்கள் இருவரும் குரலை உயர்த்திப் பேசினார்கள். அந்த இருவரில் ஒருவர் (உமர்), பனூ முஜா ஷி∴ குலத்தவரான அக்ர∴ இப்னு ஹாபிஸ் அவர்களை நோக்கி (அவரைத் தலைவராக நியமிக்கும்படி) சைகை செய்தார். மற்றொருவர் ( அபூ பக்ர்), இன்னொருவரை (க∴கா∴ இப்னு ம∴பத்) நோக்கி, (அவரைத் தலைவராக நியமிக்கும்படி) சைகை செய்தார். 'அந்த இனனொருவருடைய பெயர் எனக்குத் தெரியாது' என்று

அறிவிப்பாளர்களில் ஒருவரான நாபி ஃ(ரஹ்) அவர்கள் கூறினார்கள்: அப்போது அபூ பக்ர்(ரலி) உமர்(ரலி) அவர்களிடம், 'எனக்கு மாறு செய்யவே நீங்கள் விரும்புகிறீர்கள்' என்று கூறினார்கள். உமர்(ரலி), 'தங்களுக்கு மாறு செய்வது என் விருப்பமன்று' என்று கூறினார்கள். இந்த விவகாரத்தில் அவர்கள் இருவரின் குரல்களும் உயர்ந்தன. அப்போது, 'இறைநம்பிக்கையாளர்களே! உங்கள் குரலை நபியின் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள்!' எனும் (திருக்குர்ஆன் 49:2 வது) வசனத்தை அல்லாஹ் அருளினான்.

இப்னு ஸுபைர்(ரலி) அவர்கள் கூறினார்கள் : இந்த வசனம் அருளப்பெற்ற பின் உமர்(ரலி) நபி(ஸல்) அவர்களிடம், (அவர் என்ன கூறினார் என்பதை) நபி(ஸல்) அவர்கள் அவரிடம் (திரும்ப) விசாரித்தே தெரிந்துகொள்ளும் அளவுக்கு மெதுவாகவே பேசுவார்கள்; இப்னு ஸுபைர்(ரலி) இந்த ஹதீஸில் தம் பாட்டனார் அபூ பக்ர்(ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிடவில்லை. (புஹாரி:4367,4887, முஸ்லிம்)

## வசன எண் ஒன்று தரும் படிப்பினை;

((யா அய்யுஹல்லதீன ஆமனூ மு ஃமின்களே!)) அல்குர்ஆனில் எங்கெல்லாம் இப்படியோ அல்லது (( யா அய்யுஹன்னாஸ் மனிதர்களே!)) என்றோ வருமா அது மனிதர்களான, மு ஃமீன்களான எங்களையே அல்லாஹ் அழைக்கிறான் என்று நோக்கி, பின்னால் சொல்லப்படும் அறிவுரையை நோக்க வேண்டும், அதுவே அல்குர்ஆனை நாம் ஆழ்ந்து சிந்திப்பதற்கு வழிவகுக்கும்.

((லா துகத்திமூ பைன யதாயில்லாஹி வரஸூலிஹி; அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் முன்னால் நீங்கள் முந்தாதீர்கள், எதனையும் முற்படுத்தாதீர்கள்))

நபிகளார் உயிரோடு இருக்கும் போது அவர்களுக்கு முன்னால் கருத்து சொல்லவது, வேறு யாரின் கருத்துக்களுக்கு முக்கியம் கொடுப்பது தடுக்கப்பட்டது என்பதும், அவர்களின் மரணத்தின் பின் குர்ஆன் சுன்னாவை விட தன் கருத்தை முற்படுத்தவோ, வேறு யார் கருத்தையும் முற்படுத்தவோ கூடாது என்பதும் இறை கட்டளையாகும். முற்படுத்தப்படுவது; மத்ஹப் கருத்தாகவோ, அறிஞர்கள் கூற்றாகவோ, அமீர்மார்களின் சொந்த அபிப்பிராயங்களாகவோ, ஜமாஅத் நிபந்தனைகளாகவோ குடும்ப விருப்பங்களாகவோ எதுவாகவும் இருக்கலாம்!

இந்த வசனத்தை இப்படி புரிவதற்கு சிறந்த ஆதாரங்களாக பின் வரும் வசனங்களைக் குறிப்பிடலாம்.

மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை; ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (33:36)

உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது ( அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள். (4:65)

அந்த வசன முடிவு: (( வத்தகுல்லாஹ் இன்னால்லாஹ ஸமீஉன் அலீம்: நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், ஏனெனில் அவன் ( உங்கள் பேச்சுக்களை) செவிமடுப்பவனும், (உங்கள் செயல்களை) அறிந்தவனுமாவான்!))

பொதுவாக வசன முடிவுகளையும் அதிகம் சிந்திப்பதானது, எங்களுக்கு இன்னும் அந்த வசனங்களை புரிந்து செயற்படுத்த துணை புரியும். அல்லாஹ் எமக்கு இந்த வசனத்தில் எதனை கட்டளை இடுகின்றானோ அந்த விடயத்தை நடைமுறைப் படுத்துவதில் அல்லாஹ்வை அதிகம் பயப்பட வேண்டும், ஏனெனில் நாம் அல்லாஹ்வின் கட்டளைக்கு தனிமையில் மாறு செய்தாலும், சந்தியில் மாறு செய்தாலும், அதனை அவன் அறிவான். நாம் குர்ஆன் சுன்னாவுக்கு எதிராக சத்தமாக பேசினாலும், ரகசியமாக பேசினாலும் அதனை அவன் செவிமடுப்பான் என்ற சிந்தனையே எல்லா நிலையிலும் எமக்கு இறையச்சத்தை கொண்டு வரும்.

## வசன எண் இரண்டு தரும் படிப்பினை;

((லா தர்பஊ அஸ்வதாகும் பவ்க சவ்தின் நபிய்: நபியின் சத்தத்திற்கு மேலால் உங்கள் சத்தத்தை நீங்கள் உயர்த்த வேண்டாம்!))

இது நபியவர்கள் உயிரோடு இருக்கும் போது அவர்களுக்கு முன்னிலையில் நடந்து கொள்ளும் ஒழுக்கத்தை தெளிவுபடுத்தும் ஒரு செய்தியாகும், உண்மையில் நபித்தோழர்கள் இந்த வசனத்தை சரியாகவே புரிந்து நடைமுறை படுத்தினார்கள். அதே நேரம் நபிகளாரின் மரணத்தின் பின் நாம் நபிகளாரின் ஒரு சொல் செயல் அங்கீகாரத்திற்கு மேலாக எமது கருத்தை கொண்டு செல்லக்கூடாது என்ற ஒரு படிப்பினையும் இந்த வசனத்தின் பின் மறைந்துருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

((வலா தஜ்ஹரூ லஹு பில்கவ்லி கஜஹ்ரி ப.ஃலிக்கும் லிப.ஃல்: மேலும், உங்களுக்குள் ஒருவர் மற்றொருவருடன் வெளிப்படையாக ( பெயர் சொல்லி) பேசுவதைப் போல், அவரிடம் நீங்கள் போசாதீர்கள்!))

இது எமக்கு சொல்லும் இரண்டாவது ஒழுக்கமாகும், நாம் எமக்குள் பெயர் சொல்லி அழைப்பது போன்று முஹம்மதே என்று அழைக்க கூடாது. இதனை புரிந்து கொள்ள பின் வரும் வசனத்தை நோக்கலாம்.

(மு.ஃமின்களே!) உங்களில் ஒருவர் மற்றொருவரை அழைப்பதுபோல் உங்களுக்கிடையில் (அல்லாஹ்வுடைய) தூதரை அழைப்பதை ஆக்காதீர்கள். (24:63)

(( அன் தஹ்பத அ.ஃமாலுகும் வஅன்தும் லா தஷ்உரூன்: (இவற்றால்) நீங்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையில் உங்கள் அமல்கள் அழிந்து போகும்.))

நபிகளாருக்கு முன் ஒழுக்கக் குறைவாக நடப்பதும், அவர்களது சுன்னாக்களை புறக்கணிப்பதும், வெறுப்பதும் எங்கள் நற்காரியங்கள் நன்மைகள் அழிந்து போவதற்கு காரணமாக இருக்கும் என்பதே இந்த வசனம் விடும் எச்சரிக்கையாகும்.

இந்த வசனங்களை நபித்தோழர்கள் தம் வாழ்வில் பயன்படுத்திய விதம்!

உமர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் பின் நபிகளாருக்கு முன்னால் சத்தம் போட்டு பேசமாட்டார்கள், அப்படி ஏதாவது பேசினாலும் "என்ன சொன்னீர்கள் " என்று விளக்கம் கேட்கும் அளவுக்கே பேசுவார்கள் என்ற புஹாரி: 4367,4887 யின் செய்தி.

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் கூறினார்கள்: (ஒரு முறை) நபி(ஸல்) அவர்கள், ஸாபித் இப்னு கைஸ்(ரலி) அவர்களைக் காணவில்லை என்று தேடினார்கள். அப்போது ஒருவர், 'இறைத்தூதர் அவர்களே! நான் அவரைப் பற்றிய செய்தியை அறிந்து கொண்டு தங்களிடம் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு ஸாபித் இப்னு கைஸ்(ரலி) அவர்களிடம் சென்றார். ஸாபித் இப்னு கைஸ்(ரலி) தம் வீட்டில் தலையைக் ( கவலையுடன்) கவிழ்த்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டார். 'உங்களுக்கு என்ன ஆயிற்று?' என்று அவரிடம் கேட்டதற்கு அவர், '(பெரும்) தீங்கு ஒன்று நேர்ந்துவிட்டது. நான் நபி(ஸல்) அவர்களின் குரலை விட என்னுடைய குரலை உயர்த்தி(ப் பேசி) வந்தேன். எனவே, என் நற்செயல்கள் வீணாகிவிட்டன. நான் நரகவாசிகளில் ஒருவனாகி விட்டேன்' என்று பதிலளித்தார். உடனே, அந்த மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, ஸாபித் இப்படியெல்லாம் கூறினார் என்று தெரிவித்தார். அறிவிப்பாளர் மூஸா இப்னு அனஸ்(ரஹ்) ( தம் தந்தை அனஸ் இப்னு மாலிக் - ரலி - அவர்களிடமிருந்து) அறிவித்தார்கள்.

அடுத்த முறை அந்த மனிதர் ( பின்வரும்) மாபெரும் நற்செய்தியுடன் திரும்பிச் சென்றார். (அதாவது அம்மனிதரிடம்) நபி(ஸல்) அவர்கள் 'நீ ஸாபித் இப்னு கைஸிடம் சென்று, 'நீங்கள் நரகவாசிகளில் ஒருவரல்லர்; மாறாக, சொர்க்க வாசிகளில் ஒருவரே' என்று சொல்' என்று கூறினார்கள். புஹாரி: 3613, 4846, (முஸ்லிம்)

இந்த ஹதீஸின் தொடர் முஸ்லிமின் அறிவிப்பில் வரும் போது ஸஃத் பின் முஆத் ரலி அவர்கள் போய் விசாரித்ததாக வந்திருக்கிறது, இந்த வசனங்கள் தமீம் கிளையார் வருகையின் போதே இறங்கியது என்பது ஆதாரப்பூர்வமானது, அந்த நிகழ்வு ஹிஜ்ரி ஒன்பதில் நடக்கிறது, ஸஃத் அவர்களோ ஹிஜ்ரி ஐந்து காலப்பகுதியில் மரணித்துவிட்டார்கள். இதன் அறிவிப்பாளராக " ஹம்மாத் பின் ஸலமா" அவர்கள் தனிப்பட்டு அறிவித்திருப்பதே காரணமாகும். (இப்னு கஸீர்) அல்லாஹு அஃலம்!

இந்த வசனத்தை வைத்து சில அறிஞர்கள் நபிகளாரின் மரணத்தின் பின்னும் அவர்களது கப்ருக்கு பக்கத்தில், அவர்களது மஸ்ஜிதுக்குள் சத்தம் உயர்த்தி பேசுவதை கண்டித்தார்கள். ஆனாலும் ஹராமாக கணிக்க முடியாது. (அல்லாஹு அஃலம்)

ஸாயிப் இப்னு யஸீத்(ரலி) அவர்கள் கூறினார்கள்.நான் பள்ளி வாயலில் நின்றிருந்தபோது ஒருவர் என் மீது சிறு கல்லை எறிந்தார். நான் திரும்பிப் பார்த்தபோது உமர் இப்னுல்கத்தாப்(ரலி) அவர்கள் நின்றிருந்தார்கள். 'நீ சென்று (அதோ) அந்த இருவரையும் என்னிடம் அழைத்து வா!' என்றார்கள். அவ்விருவரையும் அவர்களிடம் கூட்டிக் கொண்டு வந்தேன். நீங்கள் இருவரும் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று உமர்(ரலி) கேட்க, 'நாங்கள் தாயிப் வாசிகள்' என்று அவர்கள் கூறினர். 'அல்லாஹ்வின் தூதருடைய பள்ளி வாசலில் சப்தங்களை நீங்கள் உயர்த்தியதற்காக நீங்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்களாக இருந்தால் உங்களிருவரையும் ( சவுக்கால்) அடித்திருப்பேன்' என்று உமர்(ரலி) அவர்கள் கூறினார். (புஹாரி: 470)

### வசன எண் மூன்று தரும் படிப்பினை;

((இன்நல்லதீன யகுள்ளுன அஸ்வதஹும் இந்த ரஸூலில்லாஹ், உலாஇகல்லதீனம் தஹானல்லாஹு குளுபஹும் லித்தகவா, லஹும் மஃபிரதுன் வஅஜ்ருன் அளீம்: நிச்சயமா அல்லாஹ்வின் தூதரிடத்தில் சத்தத்தை தாழ்த்துவோர், அவர்களது உள்ளங்களைத்தான் அல்லாஹ் இறையச்சத்திற்காக தேர்வு செய்தான். அவர்களுக்கு மன்னிப்பும், பெரும் கூலியும் இருக்கின்றது.))

இந்த வசனம் நபிகளாருக்கு முன்னிலையில் ஒழுக்கமாக நடப்போரை புகழ்ந்துரைப்பதாகும். நபிகளாரை, அவர்களது சுன்னாவை கண்ணியப்படுத்துவதே இறையச்சத்தின் வெளிப்பாடு.

## வசன எண் நான்கு, ஐந்து தரும் படிப்பினை;

((இந்நல்லதீன யுனாதூனக மிவ்வரா இல் ஹுஜுராதி அக்ஸருஹும் லா யஃகிலூன். 4 வலவ் அன்னஹும் சபரூ ஹத்தா தக்ருஜ இலைஹிம் லகான கைரன் லஹும், வல்லாஹு கபூருர் ரஹீம்: நிச்சியமாக அறைகளுக்கு வெளியே இருந்து உங்களை அழைப்பவர்களில் அதிகமானவர்கள் சிந்திக்காதவர்களே! (நபியே! நீங்கள் அவர்களிடம் வெளியேறிச் செல்லும் வரை அவர்கள் பொறுத்திருந்தால் அவர்களுக்கு அது நல்லதாக இருந்திருக்கும், அல்லாஹ்வோ மன்னிப்பவனாகவும், கருணை மிக்கவனாகவும் இருக்கின்றான்.))

இந்த வசனம் இறங்கியதற்கு சில நிகழ்வுகள் ( ஸபபுன் னுஸூல்கள்) பதியப்பட்டுள்ளன, அக்ரஃ பின் ஹாபிஸ் ரலி அவர்களின் விடயம் என்றும், ஸைத் பின் அர்கம் ரலி அவர்கள் விடயம் என்றும் பதியப்பட்டுள்ளது, அவை அறிவிப்பாளர் தொடரில் விமர்சிக்கப்பட்டவையே. அல்லாஹு அஃலம்.

இந்த வசனங்கள் நபியவர்களை அவர்களது அறைகளுக்கு வெளியே இருந்து அழைத்த அந்த செயலை கண்டிக்கிறன. அதேநேரம் கண்டிக்கும் விதம் எங்களுக்கு ஆழமான ஒரு பாடத்தை புகட்டுகின்றது.

அதுதான்; மிகப்பெரும் தவறு செய்தவர்களையே அல்லாஹ் "சிந்திக்காதவர்கள்" என்று கூறுவதன் மூலம், சமூகத்தில் சிந்திக்காமல், மடத்தனமாக நடந்து கொள்ளும் மனிதர்களும் இருப்பார்கள், அவர்களை புரிந்து நடக்குமாறு அறிவுரை சொல்கிறது இந்த வசனம். அப்படிப்பட்டவர்களை வெறுத்து நடக்காமல் அவர்களுக்கு புத்திமதி சொல்லிக்கொடுத்து, அவர்களை மன்னிக்குமாறு மறைமுகமாக வேண்டுகிறது இந்த வசனம். அதனையே அல்லாஹ் "அவர்கள் பொறுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று புத்திமதி கூறி, அல்லாஹ்வின் மன்னிப்பையும் நினைவூட்டுகின்றான். உண்மையில் இந்த வசனம் கூறும் அறிவுரை சமூகத்தில் பேணப்படுமாக இருந்தால் ஒற்றுமை, சகோதரத்துவம் பேணப்படுவதற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கும்.

இந்த வசனத்தை புரிந்து கொள்ள பின்வரும் வசனத்தையும் சேர்த்து நோக்குவோம்.

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَاَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ

எனினும் ( நபியே) மன்னிப்பைக் கைக் கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு ஏவுவீராக மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும். (7:199)

يٰأَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنْ جَاءَكُمْ فَاسِقٌ بِنَبَإٍ فَتَبَيَّنُوا أَنْ تُصِيبُوا قَوْمًا بِجَهَالَةٍ فَتُصْبِحُوا عَلَى مَا فَعَلْتُمْ نَادِمِينَ (6) وَاعْلَمُوا أَنَّ فِيكُمْ رَسُولَ اللَّهِ لَوْ يُطِيعُكُمْ فِي كَثِيرٍ مِنَ الْأَمْرِ لَعَنِتُّمْ وَلَكِنَّ اللَّهَ حَبَّبَ إِلَيْكُمُ الْإِيمَانَ وَزَيَّنَهُ فِي قُلُوبِكُمْ وَكَرَّهَ إِلَيْكُمُ الْكُفْرَ وَالْفُسُوقَ وَالْعِصْيَانَ أُولَئِكَ هُمُ الرَّاشِدُونَ (7) فَضْلًا مِنَ اللَّهِ وَنِعْمَةً وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ (8)

முஃமின்களே! பாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள்; (இல்லையேல்) அறியாமையினால் (குற்ற மற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்.

(49:6)

## வசன எண் ஆறு தரும் படிப்பினை;

((யா அய்யுஹல்லதீன ஆமனூ இன் ஜாஅகும் பாசிகுன் பினபஇன் பதபையனூ, அன்துஸீபூ கொவ்மன் பிஜஹாலதின் பதுஸ்பிஹூ அலாமா பஅல்தும் நாதிமீன்!: முஃமின்களே! பாஸிக் ( தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள்; (இல்லையேல்) அறியாமையினால் (குற்ற மற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப் படுபவர்களாக ( கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்.))

முஃமீன்களே என்று விழித்த இந்த வசனம் சமூகத்திற்கு மிக அவசியமான ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகின்றது, அது தான் ஒரு தகவலை பரப்ப முன் அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்பது. இந்த வசனம் சொல்லும் புத்திமதி பேணப்படுமாக இருந்தால் அது சமூக ஒற்றுமைக்கும், நலனுக்கும் பெரிதும் பாதுகாப்பாக இருக்கும். ஆனால் இன்று உறுதிப்படுத்தாத தகவல்கள் பரவுவதால் சமூகத்தில் பல பிரச்சினைகள் தலைதூக்கி, சமூக நல்லிக்கணக்கம் அழிக்கப்படுவதை காணலாம். காலம் தாமதித்தே மனிதன் தவறை உணர்கிறான், கைசேதப்படுகிறான், அந்த நேரம் ஒரு சமூகம் பாதிப்படைந்திருக்கும்.

### இந்த வசனம் இறங்கியதற்கான காரணம் (ஸபபுன் னுஸூல்)

இந்த வசனம் "அல் வலீத் பின் உகப்பதுப்னு அபீ முஅய்த் அவர்கள், பனூ முஸ்தலக் கூட்டத்தாரிடம் ஸதகா வசூலிக்க சென்ற விடயத்தில் அவர் " அல் ஹாரிஸ் பின் லிரார்" விடயத்தில் பொய் கூறிய போது இறங்கியதாக முஸ்னத் அஹ்மத் , மற்றுமுள்ள நூல்களில் பதியப்பட்டுள்ளது, அதன் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானதாகும். (அல்லாஹு அஃலம்) (இப்னு கஸீர்)

இந்த வசனத்தில் இருந்தே ஹதீஸ் கலை வல்லுனர்கள் ( முஹத்திஸீன்கள்) நபிகளாரைப்பற்றிய தகவல்களை அறிவிப்பாளர்களை ஆய்வு செய்து எடுத்தனர், அந்த அடிப்படையிலே ஸஹீஹ் லாஃப் என்று வகை பிரித்தனர். இதனைப் பற்றிய பூரண தெளிவை ஸஹீஹ் முஸ்லிமின் முன்னுரையில் பார்க்கலாம். இதனை வலுவூட்டும் சில ஆதாரங்கள் பின்வருமாறு!

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ ۚ إِنَّ السَّمْعَ وَالْبَصَرَ وَالْفُؤَادَ كُلُّ أُولَٰئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا

எதைப்பற்றி உமக்கு(த் தீர்க்க) ஞானமில்லையோ அதை(ச் செய்யத்) தொடரவேண்டாம்; நிச்சயமாக ( மறுமையில்) செவிப்புலனும், பார்வையும், இருதயமும் இவை ஒவ்வொன்றுமே (அதனதன் செயல் பற்றி) கேள்வி கேட்கப்படும். (17:36)

'என் மீது வேண்டுமென்றே இட்டுக்கட்டுகிறவன் நரகத்தில் தன்னுடைய இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளட்டும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதால்தான், உங்களுக்கு நான் அதிகமான நபிமொழிகளை எடுத்துரைக்காமல் என்னைத் தடுத்துக் கொள்கிறேன்' என அனஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள். (புஹாரி: 107, 108, முஸ்லிம்)

அபூஹுரைரா ( ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்:ஒருவர் தாம் கேள்விப்பட்டதையெல்லாம் ( பிறருக்கு) அறிவிப்பதே அவர் பொய்யர் என்பதற்குப் போது(மான சான்றாகு)ம். (முஸ்லிம் முன்னுரை)

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொய் எனக் கருதப்படும் ஒரு செய்தியை என்னைப் பற்றி யார் அறிவிக்கிறாரோ அவரும் பொய்யர்களில் ஒருவராவார். இந்த ஹதீஸ் முகீரா பின் ஷுஃபா ( ரலி) அவர்களிடமிருந்தும் சமுரா பின் ஜுன்தப் (ரலி) அவர்களிடமிருந்தும் அறிவிக்கப்படுகிறது. ((முஸ்லிம் முன்னுரை)

முஹம்மத் பின் சீரீன் ( ரஹ்) அவர்கள் கூறியதாவது: மக்கள் ( ஆரம்பக் காலங்களில் ஹதீஸ்கள் அறிவிக்கப்படும்போது அவற்றின்) அறிவிப்பாளர் தொடர்கள் குறித்துக் கேட்டதில்லை. ஆனால், (பிற்காலத்தில்) குழப்பங்கள் தோன்றியபோது உங்களுக்கு இந்த ஹதீஸை அறிவித்த அறிவிப்பாளர்களின் பெயர்களையும் எங்களுக்கு அறிவியுங்கள்" என்று கூறலாயினர். ஆகவே, அந்த அறிவிப்பாளர்கள் நபிவழிக்காரர்களா என்று கவனித்து, அவ்வாறிருந்தால் அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்கள் மட்டும் ஏற்கப்படும். அவர்கள் ( நபிவழியில் இல்லாதவற்றைக் கூறும்) புதுமைவாதிகளாய் இருந்தால் அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்கள் ஏற்கப்படமாட்டாது.((முஸ்லிம் முன்னுரை)

சுலைமான் பின் மூசா ( ரஹ்) அவர்கள் கூறியதாவது: நான் தாவூஸ் பின் கைசான் (ரஹ்) அவர்களைச் சந்தித்து, இன்னார் எனக்கு இன்னின்னவாறு அறிவித்தார்" என்று கூறினேன். அதற்கு தாவூஸ் ( ரஹ்) அவர்கள், இதை உமக்கு அறிவித்தவர் நம்பத்தகுந்தவராய் இருந்தால் ஏற்றுக்கொள்" என்று கூறினார்கள்.((முஸ்லிம் முன்னுரை)

وَاعْلَمُوا أَنَّ فِيكُمْ رَسُولَ اللَّهِ لَوْ يُطِيعُكُمْ فِي كَثِيرٍ مِنَ الْأَمْرِ لَعَنِتُّمْ وَلَكِنَّ اللَّهَ حَبَّبَ إِلَيْكُمُ الْإِيمَانَ وَزَيَّنَهُ فِي قُلُوبِكُمْ وَكَرَّهَ إِلَيْكُمُ الْكُفْرَ وَالْفُسُوقَ وَالْعِصْيَانَ أُولَئِكَ هُمُ الرَّاشِدُونَ (7) فَضْلًا مِنَ اللَّهِ وَنِعْمَةً وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ (8)

அறிந்துகொள்ளுங்கள்: நிச்சயமாக உங்களிடையே அல்லாஹ்வின் தூதர் இருக்கிறார்; அநேக காரியங்களில் அவர் உங்களுக்கு வழிப்பட்டால், திடமாக நீங்கள் தாம் கஷ்டத்திற்குள்ளாவீர்கள், எனினும் அல்லாஹ் ஈமானை (நம்பிக்கையை) உங்களுக்குப் பிரியமுடையதாக்கி உங்கள் இதயங்களிலும் அதனை அழகாக்கியும் வைத்தான் - அன்றியும் குஃப்ரையும் (நிராகரிப்பையும்) பாவத்தையும், மாறுபாடு செய்வதையும் உங்களுக்கு வெறுப்பாகவும் ஆக்கினான்; இத்தகையவர்கள் தாம் நேர்வழியில்

நடப்பவர்கள்.8. (இது) அல்லாஹ்விடமிருந்துள்ள அனுக்கிரமும், அருள்கொடையினாலுமேயாகும், மேலும் அல்லாஹ் நன்கறிந்தவன்; ஞானம் மிக்கோன். (49:8)

## வசன எண் ஏழு, எட்டு தரும் படிப்பினை;

((வஃலமூ அன்ன பீகும் றஸூலல்லாஹ், லவ் யுதீஉகும் பீகஸீரிம் மினல் அம்ரி லஅணித்தும்: அறிந்து கொள்ளுங்கள் உங்களில் அல்லாஹ்வின் தூதர் இருக்கின்றார், அதிகமான விடயங்களில் அவர் உங்களுக்கு கட்டுப்பட்டிருந்தால் நீங்களே கஷ்டப்பட்டிருப்பீர்கள்.))

இந்த வசனம், நபிகளார் உயிரோடு வாழ்ந்த நேரம் நபித்தோழர்களுக்கு கருணை மிக்கவர்களாக இருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகும், ஏனெனில் நபியவர்கள் எந்த ஒரு விடயமாக இருந்தாலும் இலகுவானதையே தேர்வு செய்வார்கள், நபித்தோழர்களோ அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்திற்கு கஷ்டமானதையும், அதிகமானதையுமே தேர்வு செய்வார்கள், நபிகளாரோ அந்த விடயங்களில் அவர்கள் ஆசைகளுக்கு கட்டுப்படாமல் இலகுவானதை தேர்வு செய்வார்கள். இதற்கு அதிகமான சான்றுகளை பார்க்கலாம்.

ஹுதைபிய்யா உடன் படுக்கையின் போது உமர் ரலி அவர்கள் யுத்தம் செய்வதையும், உயிர் தியாகம் செய்து போராடுவதையும் தேர்வு செய்ய, நபியவர்களோ ஒப்பந்த அடிப்படையில் திரும்பி செல்ல முடிவெடுத்தார்கள். இது அதற்கு சிறந்த ஆதாரமாகும். (புஹாரி: 3182,4844, முஸ்லிம்)

அப்துல்லாஹ் பின் அம்ர் ரலி அவர்கள் மாதம் முழுக்க நோன்பு பிடிக்க சக்தியிருக்கிறது என்று அவகாசம் கேட்டபோது, முடியாது, மூன்று, அல்லது ஒருநாள் விட்டு ஒருநாள் என்ற இலேசை முடிவு செய்தார்கள், மேலும் ஒவ்வொரு நாளும் ஒரு குர்ஆன் முடிக்க அனுமதி கேட்ட போது, முறப்பது நாட்களில் ஒன்று, அல்லது இருபது நாட்களில் ஒன்று, அல்லது பத்து நாட்களில் ஒன்று, அல்லது ஏழு நாற்களில் ஒன்று, அதை விட அதிகப்படுத்த கூடாது என்று கூறி, ஆர்வம், சக்தி உள்ள அவருக்கு நபிகளார் இலேசையே தேர்வு செய்தார்கள். (புஹாரி: 1976,1978, முஸ்லிம்)

இதனையே ஆயிஷா(ரலி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அல்லாஹ்வின் தூதரிடம் கூறப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே - அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் - எப்போதும் தேர்ந்தெடுப்பார்கள். அது பாவமான விஷயமாக இருந்தால் மக்களிலேயே அதிகமாக அதிலிருந்து வெகு தொலைவில் (விலகி) நிற்பார்கள். (புஹாரி: 3560, 6126, முஸ்லிம்)

((வலாகின்னல்லாஹ ஹப்பப இலைகுமுல் ஈமான வசையனஹு பீ குலூபிகும், வகர்ரஹ இலைகுமுல் குப்ர வல் புஸூக வல் இஸ்யான், உலாஇக ஹுமுர் ராஷிதூன். பல்லம் மினல்லாஹி வனிஃமஹ், வல்லாஹு அலீமுன் ஹகீம்: ஆனாலும் அல்லாஹ் ஈமானை உங்களுக்கு விருப்பத்திற்குரியதாக ஆக்கி, அதனை உங்கள் உள்ளங்களுக்கு அழகாக்கினான், மேலும் இறைமறுப்பையும், பாவத்தையும், மாறுசெய்வதையும் உங்களுக்கு வெறுப்பாக்கினான். அவர்களே நேர்வழி

பெற்றவர்களாவர், இது அல்லாஹ்விடமிருந்து சிறப்பாகவும், அருளாகவும் இருக்கின்றது, அல்லாஹ்வோ அறிந்தவனும் அஞானம் மிக்கவனுமாவான். ))

இந்த வசனம் நபித்தோழர்களுக்கு அல்லாஹ் செய்த மிகப் பெரியதோர் அருளை பற்றி பேசுகிறது. அதுதான், நபிகளார் நபித்தோழர்களுக்கு மாற்றமாக முடிவெடுக்கும் நேரங்களில் நபித்தோழர்கள் முரண்பட்டு, வெறுத்து செல்லாமல்,அதனை உள்ளத்தால் ஏற்றார்கள், இதற்கு காரணம் அவர்களது உள்ளங்களில் அல்லாஹ் ஈமானை உறுதிப்படுத்தி வைத்திருந்தாகும்.

எனவே ஒரு மனிதன் தன் ஈமானின் நிலையை சுயபரிசோதனை செய்கின்ற இடம், அளவுகோல் இதுவாகும். 'அல்லாஹ்வின் கட்டளையை, நபிகளாரின் சுன்னாவை உள்ளத்தால் ஏற்று நடைமுறைபடுத்துவது உள்ளத்தில் ஈமான் இருக்கிறது என்பதற்கு சான்றாகும்.' நபித்தோழர்களுக்கு அல்லாஹ் பரிசாக கொடுத்தான் நாம் அதனை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அடுத்த பாக்கியம், குப்ர் என்று இறை நிராகரிப்பையும், பாவம் செய்வதையும், மாறுசெய்வதையும் அவர்களுக்கு வெறுக்க செய்தான், நாம் அதனை எமக்குள் வளர்க்க வேண்டும், அதுவே எம்மை உண்மை முஃமின் என்று அடையாளப்படுத்தும். அப்படிப்பட்டவர்களையே அல்லாஹ் நேர்வழி பெற்றவர்கள் என்று சிலாகித்து அந்த வசனத்தை முடிக்கின்றான். நபிகளார் இந்த பண்புகளை வேண்டி அல்லாஹ்வை பிரார்த்தித்தும் இருக்கின்றார்கள். இதனை இலகுவாக புரிந்து கொள்ள சில ஹதீஸ்களை நோக்குவோம்!.

அனஸ் ரலி அவர்கள் கூறினார்கள்: 'எவரிடம் மூன்று தன்மைகள் அமைந்துவிட்டனவோ அவர் ஈமான் எனும் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்தவராவார். ( அவை) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒருவருக்கு மற்றெல்லாவற்றையும் விட அதிக நேசத்திற்குரிய தாக இருப்பது, ஒருவர் மற்றொருவரை அல்லாஹ்வுக்காகவே நேசிப்பது, நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போல் இறை நிராகரிப்புக்குத் திரும்பிச் செல்வதை வெறுப்பது' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி: 16,21, முஸ்லிம்)

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் எங்களுக்கு இரண்டு ஹதீஸ்களை அறிவித்தார்கள். அவற்றில் ஒன்றை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் எனக் குறிப்பிட்டார்கள். மற்றொன்றைக் தாமாகக் கூறினார்கள். (அவையாவன:)

1. இறைநம்பிக்கையாளர் தம் பாவங்களை , அவர் ஒரு மலை அடிவாரத்தில் உட்கார்ந்திருப்பதைப் போன்றும், அந்த மலைத் தம் மீது விழுந்துவிடுமோ என அஞ்சுபவரைப் போன்றும் பார்ப்பார். ஆனால், பாவியோ தன் பாவங்களைத் தன்னுடைய மூக்கின் மேல் பறந்து செல்லும் ஈயைப் போன்று ( அற்பமாகக்) காண்பான் - இதைக் கூறியபோது இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் தங்களின் மூக்குக்கு மேலே ( ஈயை) விரட்டுவது போன்று தம் கையால் சைகை செய்தார்கள். (புஹாரி: 6308)

நபி ஸல் அவர்கள் உஹது யுத்தத்தின் போது தோழர்களை அணிவகுத்துவிட்டு, நீண்டதொரு துஆவைக் கேட்டர்கள் அதில் பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்;

اللَّهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْإِيمَانَ وَزَيِّنْهُ فِي قُلُوبِنَا، وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ، وَالْفُسُوقَ، وَالْعِصْيَانَ، وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِينَ

அல்லாஹ்வே எங்களுக்கு ஈமானை விருப்பத்திற்குரியதாக ஆக்கி, அதனை

உள்ளத்திட்கு அழகாகவும் ஆக்கிவிடு, மேலும் குப்ரையும், பாவத்தையும், மாறுசெய்வதையும் எங்களுக்கு வெறுக்க செய்துவிடு, மேலும் எங்களை நேர்வழி பெற்றவர்களில் ஆக்கிவிட்டு!...... (அஹ்மத்:15492)

எனவே அல்லாஹ் பாக்கியமாக வழங்கும் இந்த பண்புகளை எமக்குள் வளர்க்க நாம் முயற்சிப்போம்.

وَإِنْ طَائِفَتَانِ مِنَ الْمُؤْمِنِينَ اقْتَتَلُوا فَأَصْلِحُوا بَيْنَهُمَا فَإِنْ بَغَتْ إِحْدَاهُمَا عَلَى الْأُخْرَى فَقَاتِلُوا الَّتِي تَبْغِي حَتَّى تَفِيءَ إِلَى أَمْرِ اللَّهِ فَإِنْ فَاءَتْ فَأَصْلِحُوا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَأَقْسِطُوا إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ (9) إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا بَيْنَ أَخَوَيْكُمْ وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ (10)

முஃமீன்களில் இரு சாரார் சண்டைபிடித்துக் கொண்டால் அவர்களிடையே நீங்கள் நல்லிணக்கப்படுத்துங்கள், (அப்படி நீங்கள் செய்யும்போது) ஒரு சாரார் அடுத்தவர்கள் மீது வரம்பு மீறி நடந்தால், வரம்பு மீறும் அந்த சாரார் அல்லாஹ்வின் கடடலைக்கு மீண்டுவரும்வரை அவர்களுக்கு எதிராக நீங்களும் யுத்தம் புரியுங்கள். அப்படி அவர்கள் மீண்டு வந்து விட்டால் அவர்களிடையே நடுநிலையுடன் இணக்கப்படுத்துங்கள், மேலும் நீதமாக நடங்கள், நிச்சியமாக அல்லாஹ் நீதம் செலுத்துவோரை நேசிக்கிறான். முஃமீன்கள் என்றாலே சகோதரர்கள் தான், எனவே உங்கள் சகோதர்களுக்கிடையில் இணைக்கப்படுத்துங்கள், நீங்கள் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள், நீங்கள் அருள்பாலிக்கப்படுவீர்கள். (49:9,10)

## வசன எண் ஒன்பது, பத்து தரும் படிப்பினை;

((வஇன் தாஇபாதனி மினல் முஃமினீனக் ததலூ பஅஸ்லிஹூ பைனஹுமா, பஇன் பகத் இஹ்தாஹுமா அலல் உக்ரா பகாதிலுல்லதீ தப்கீ ஹத்தா தப்பீஅ இலா அம்ரில்லாஹ், பஇன் பாஅத் பஅஸ்லிஹூ பைனஹுமா பில் அத்லி, வஅக்ஸிது இன்னால்லாஹ யுஹிப்புல் முக்ஸிதீன். இன்னமல் முஃமினூன இக்வா, பஅஸ்லிஹூ பைன அகவைகும் வத்தகுல்லாஹ், லஅல்லகும் துர்ஹாமூன், : முஃமீன்களில் இரு சாரார் சண்டைபிடித்துக் கொண்டால் அவர்களிடையே நீங்கள் நல்லிணக்கப்படுத்துங்கள், (அப்படி நீங்கள் செய்யும்போது) ஒரு சாரார் அடுத்தவர்கள் மீது வரம்பு மீறி நடந்தால், வரம்பு மீறும் அந்த சாரார் அல்லாஹ்வின் கடடலைக்கு மீண்டுவரும்வரை அவர்களுக்கு எதிராக நீங்களும் யுத்தம் புரியுங்கள். அப்படி அவர்கள் மீண்டு வந்து விட்டால் அவர்களிடையே நடுநிலையுடன் இணக்கப்படுத்துங்கள், மேலும் நீதமாக நடங்கள், நிச்சியமாக அல்லாஹ் நீதம் செலுத்துவோரை நேசிக்கிறான். முஃமீன்கள் என்றாலே சகோதரர்கள் தான், எனவே உங்கள் சகோதர்களுக்கிடையில் இணைக்கப்படுத்துங்கள், நீங்கள் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள், நீங்கள் அருள்பாலிக்கப்படுவீர்கள்.

இந்த வசனங்கள் சமூகக் கடமைகளில் முக்கியமான, சமூக ஒற்றுமைக்கு மிக அவசியமான சில விடயங்களை கோடிட்டு காட்டுகின்றன.

1- முஸ்லிம்களிடையே சில போது பிரிவினைகள் ஏற்பட்டு, அது யுத்தமாக மாறினாலும், அவர்களை பார்த்து காபிர்களாகிவிட்டார்கள் என்று கூறும் அதிகாரம் நமக்கில்லை, அவர்களை முஃமீன்களாக பார்த்து இணக்கப்படுத்துவதே எம்மீதுள்ள கடமை. அதனால் தான் முஃமீன்களில் இரு சாரார் என்று அல்லாஹ் விழிக்கிறான். இதனையே நபிகளாரின் முன்னறிவிப்பு செய்தி ஒன்றும் நமக்கு பாடம் சொல்கிறது,

அபூ பக்ரா ரலி அவர்கள் கூறினார்கள்;' (ஒரு முறை) இறைத்தூதர் மிம்பர் மீதிருக்க, அவர்களின் ஒரு பக்கத்தில் ஹஸன் இப்னு அலீ(ரலி) அமர்ந்திருக்க, நபி(ஸல்) அவர்கள் ஒரு முறை மக்களை நோக்கியும், மற்றொரு முறை ஹஸன்(ரலி) அவர்களை நோக்கியும் ( உரை நிகழ்த்திய வண்ணம்), 'இந்த என்னுடைய புதல்வர் தலைவராவார். முஸ்லிம்களின் இரண்டு பெரும் கூட்டத்தாரிடையே இவரின் மூலமாக அல்லாஹ் சமாதானம் செய்து வைக்க விரும்புகிறான்' என்று கூறிக் கொண்டிருந்ததை பார்த்தேன்' (புஹாரி: 2704)

இங்கு முஸ்லிம்களில் இரு பெரும் கூட்டம் என்று நபிகளார் கோடிட்டுக்காட்டியிருக்கிறார்கள். இதனை வைத்தே புஹாரி இமாம் போன்ற அறிஞர்கள் பெரும் பாவம் ஒருவனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றாது என்ற, கவாரிஜ்கள், முஃதஸிலாக்களுக்கு எதிரான கருத்தை சட்டமாக எடுத்தார்கள்.

2- முஸ்லிம்கள் முரண்படுகின்ற, சண்டைபிடிக்கின்ற நேரங்களில் அதனை பார்க்கின்ற முஸ்லிம்கள், நல்லிணக்க முயற்சியில் ஈடுபடவேண்டுமே அல்லாமல், நடுநிலை பேணுகிறோம் என்ற பாணியில் ஒதுங்கி செல்லக்கூடாது. ஆனால் இன்று இந்த வழிகாட்டல் பின்பற்றப்படாமையே முஸ்லிம்கள் மத்தியில் இன்று அதிகரித்திருக்கும் பிரச்சினைகளுக்கும், பிரிவுகளுக்கும் காரணமாகும்.

3- நல்லிணக்கப்படுத்தும் நேரம் அல்லாஹ்வினதும் தூதரினதும் வழிகாட்டல் படியே நீதமாக நடந்துகொள்ள வேண்டும், அந்த நேரம் எந்த சாரார் அல்லாஹ் ரசூலை மீறி நடக்கிறார்களோ அவர்களுக்கு எதிராக போராடவும் வேண்டும், இதுவே நல்ல மாற்றத்தை கொண்டுவரும்.

4- இரு சாராரும் கட்டுப்படுகின்ற நேரம், பக்க சார்பின்றி நடுநிலை பேணுவதும், நீதமாக நடப்பதும் அல்லாஹ்வின் பக்கம் எம்மை நெறுக்கிவைக்கும். இதனையே அல்லாஹ் 'இன்னல்லாஹ யுஹிப்புல் முக்ஸிதீன்" என்ற சொல் மூலம் எங்களுக்கு சொல்லித்தருகிறான்.

இந்த வசனம் இறங்கியதற்கான காரணம் (ஸபபுன் னுஸூல்)

அனஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்களிடம், 'தாங்கள் அப்துல்லாஹ் இப்னு உபையிடம் வந்தால் நன்றாயிருக்கும்' என்று கூறப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் அவனிடம் செல்ல ஒரு கழுதையில் ஏறினார்கள். முஸ்லிம்களும் நபி(ஸல்) அவர்களுடன் நடந்து சென்றார்கள். அவர்கள் சென்ற பாதை உவர் நிலமாக இருந்தது. அவனை நபி(ஸல்) அவர்கள் சென்றடைந்தபோது அவன், 'தூர விலகிப் போ! அல்லாஹ்வின் மீதாணையாக! உன் கழுதையின் துர்நாற்றம் என்னைத் துன்புறுத்திவிட்டது' என்று கூறினான். அப்போது அவர்களிடையே இருந்த அன்சாரி

(தோழர்) ஒருவர், 'அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதருடைய கழுதை உன்னை விட நல்ல வாசனையுடையதாகும்' என்று கூறினார். அப்துல்லாஹ்வுக்காக அவனுடைய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் ஆத்திரமடைந்து அந்த அன்சாரியை ஏசினார். அந்த இருவருக்காகவும் அவரவருடைய நண்பர்கள் கோபமடைந்தார்கள். தங்களுக்கிடையே ஈச்சங் ( கிளையின்) குச்சியாலும், கைகளாலும் செருப்புகளாலும் அடித்துக் கொண்டார்கள். அப்போது, 'மேலும், இறைநம்பிக்கையாளர்களில் இரண்டு குழுவினர் தங்களுக்குள் சண்டையிட நேர்ந்தால் அவர்களிடையே சமாதானம் செய்து வையுங்கள்' (திருக்குர்ஆன் 49:09) என்னும் வசனம் அருளப்பட்டிருக்கிறது என்னும் செய்தி எங்களுக்கு எட்டியது. (புஹாரி:2691, முஸ்லிம்)

இந்த கடடலையை நபியவர்கள் தன வாழ்நாளில் அதிகம் நடைமுறைப்படுத்தி, நபித்தோழர்களிடையே நல்லிணக்கப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

ஸஹ்ல் இப்னு ஸஃத்(ரலி) அவர்கள் கூறினார்கள்: அம்ர் இப்னு அவ்ப் குடும்பத்தைச் சேர்ந்த சிலருக்குள் ஏதோ தகராறு இருந்து வந்தது. எனவே, நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்கள் சிலர் புடைசூழ அவர்களிடையே சமாதானம் செய்து வைப்பதற்காக அவர்களை நோக்கிப் புறப்பட்டார்கள். (நபி(ஸல்) அவர்கள் அங்கு சென்றிருந்த போது) தொழுகை நேரம் வந்துவிட்டது. நபி(ஸல்) அவர்கள் இன்னும் (திரும்பி) வரவில்லை. அப்போது பிலால்(ரலி) பாங்கு சொன்னார்கள். ( அதன் பிறகும்) நபி(ஸல்) அவர்கள் வரவில்லை. எனவே, பிலால்(ரலி) அபூ பக்ர்(ரலி) அவர்களிடம் சென்று, 'நபி(ஸல்) அவர்கள் ( வேலையின் காரணத்தால் உடனே வர முடியாமல்) தாமத்திற்குள்ளாகி யிருக்கிறார்கள். தொழுகை நேரம் வந்துவிட்டது. எனவே, தாங்கள் மக்களுக்குத் (தலைமை தாங்கித் தொழுவிக்கிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'சரி, நீங்கள் விரும்பினால் தொழுகை நடத்துகிறேன்' என்று கூறினார்கள். உடனே, பிலால்(ரலி) தொழுகைக்கு இகாமத் சொல்ல, அபூ பக்ர்(ரலி) ( தொழுகை நடத்துவதற்காக) முன்னால் சென்றார்கள்........ (புஹாரி:2690)

ஸஹ்ல் இப்னு ஸஃத்(ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் மற்றுவர் மீது கற்கள் வீசிக் கொள்ளுமளவிற்கு 'குபா' வாசிகள் ( தமக்கிடையே) சண்டையிட்டனர். அல்லாஹ்வின் தூதரிடம் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர்கள், 'நம்மை அழைத்துச் செல்லுங்கள். நாம் அவர்களுக்கிடையே சமாதானம் செய்து வைப்போம்' என்று கூறினார்கள். (புஹாரி: 2693)

கஃப் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதருடைய காலத்தில் எனக்கு இப்னு அபீ ஹத்ரத்(ரலி) தர வேண்டியிருந்த ஒரு கடனை (மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலில் வைத்துத் திருப்பிச் செலுத்தும்படி கேட்டேன். (எங்கள்) இருவரின் குரல்களும் நபி(ஸல்) அவர்கள் தம் வீட்டிலிருந்தபடியே அதைக் கேட்கும் அளவிற்கு உயர்ந்தன. எனவே, நபி(ஸல்) அவர்கள் எங்களிருவரையும் காணப் புறப்பட்டு வந்தார்கள். தம் அறையின் திரையை விலக்கி, 'கஅபே!' என்றழைத்தார்கள். நான், 'இதோ வந்துவிட்டேன், இறைத்தூதர் அவர்களே!' என்று பதிலளித்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் 'பாதிக் கடனைத் தள்ளுபடி செய்துவிடு' என்று தம் கரத்தால் சைகை காட்டினார்கள். 'அவ்வாறே செய்து விட்டேன், இறைத்தூதர் அவர்களே!' என்று நான் கூற, இப்னு அபீ ஹத்ரத்(ரலி) அவர்களைப் பார்த்து, 'நீங்கள் எழுந்து சென்று

அவரின் கடனை அடையுங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். புஹாரி: 451,471, (முஸ்லிம்)

நீதம் செலுத்துவதை வலியுறுத்திய இஸ்லாம் நீதமாக நடப்போருக்கு பெரும் கூலியையும் வைத்திருக்கின்றது, நீதம் செலுத்துவதில் மத வேறுபாடுகளையும் கடந்து இஸ்லாம் முக்கியத்துவம் செலுத்துகின்றது.

மு..ஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்; (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்); ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன்; எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள்; மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். (4:135)

மு..ஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (5:8)

மார்க்க ( விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான். (60:8)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத நாளான மறுமை நாளில் அல்லாஹ் தம் நிழலை ஏழு பேர்களுக்கு அளிக்கிறான். அவர்கள்; நீதியை நிலை நாட்டும் தலைவர், ....... (புஹாரி:660, முஸ்லிம்)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நேர்மையானவர்கள், வல்லமையும் மாண்பும் மிக்க அளவற்ற அருளாளன் அல்லாஹ்வின் வலப்பக்கத்தில் ஒளியாலான மேடைகளில் இருப்பார்கள். அவனுடைய இரு கைகளுமே வலக்கரமே (வளமிக்கதே). அவர்கள் தமது நிர்வாகத்திலும், குடும்பத்திலும், தாம் பொறுப்பேற்றுக்கொண்ட (அனைத்)திலும் நியாயமாக நடந்துகொண்டனர் ( என்பதே இச்சிறப்புக்குக் காரணம்). (முஸ்லிம்: 3731)

((இன்னமல் மு..ஃமினூன இக்வா, மு..ஃமீன்கள் என்றாலே சகோதரர்கள் தான்))

என்றால் மு..ஃமீன்கள் ஈமானிய சகோதரத்துவத்தைக் கட்டிக்காப்போராக இருக்க வேண்டும், அதுவே உண்மையான ஈமானின் அடையாளமும் கூட, இந்த சகோதரத்துவம் மார்க்க அடிப்படையிலானதாகும், பிறப்பின் அடிப்படையில் ஏற்படும் சகோதரத்துவம் என்பது வேறாகும்.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் என்றால் அடுத்த முஸ்லிமுக்கு சகோதரனாவான், அவன் அநியாயம் இழைக்கவோ, காபிர்களிடம் ஒப்படைக்கவோ மாட்டான் ..... (புஹாரி: 2442,6951, முஸ்லிம்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கொருவர் கருணைபுரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் ( உண்மையான) இறைநம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். ( உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் ( சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டுவிடுகிறது. (புஹாரி: 6011)

சகோதரத்துவத்தை இழப்பதே ஈமானிய இழப்புக்கு அடையாளமாகும்.

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இறைநம்பிக்கை கொள்ளாதவரையில் சொர்க்கத்தில் நுழைய முடியாது.நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காதவரை ( முழுமையான) இறைநம்பிக்கையாளராக முடியாது. ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? அதை நீங்கள் செயல்படுத்தினால் ஒருவரை ஒருவர் நேசம் கொள்ளலாம்.உங்களிடையே சலாத்தைப் பரப்புங்கள். (முஸ்லிம்: 93)

பிரச்சினைபடும் முஸ்லிம்களை நல்லிணக்கப்படுத்துதல், சகோதரத்துவத்தை காக்கும் முஸ்லிமின் முக்கிய அடையாளமாகும், ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் பிரச்சினைகளில் திருப்திகாண மாட்டான். நல்லிணக்கப்படுத்தல் என்பது மிகச் சிறந்த இபாதத்தாகும், அதற்காக பொய் பேசுவதையும் இஸ்லாம் அங்கீகரித்துள்ளது .

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்கள், தம் ஒவ்வொரு மூட்டு எலும்புக்காகவும் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தர்மம் செய்வது கடமையாகும். மக்களிடையே நீதி செலுத்தி, நல்லிணக்கப்படுத்துவதும் ஒரு தர்மமே. (புஹாரி: 2707, முஸ்லிம்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ( பரஸ்பரம் பிணங்கிய இரண்டு தரப்பாரிடமும்) நல்லதை ( புனைந்து) சொல்லி மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துபவன் பொய்யன் அல்லன். புஹாரி: 2692, முஸ்லிம்)

ரகசியம் பேசுவதை நல்லதோர் விடயமாக பொதுவாக பார்க்காத இஸ்லாம், இணக்கப்படுத்தும் விடயத்தில் ரகசியம் பேசுவதையும் அங்கீகரித்துள்ளது.

மனிதர்களின் பெரும்பாலான இரகசியப் பேச்சுகளில் எவ்வித நன்மையும் இருப்பதில்லை. தான தர்மம் செய்யும்படியோ, நற்செயல் புரியும் படியோ, மக்களிடையே நல்லிணக்கம் செய்யும்படியோ அறிவுரை கூறுபவர் களின் பேச்சுக்களைத் தவிர. ( அவற்றில் நன்மை உண்டு.) மேலும், எவர் அல்லாஹ்வின் திருப்தியை நாடி இவ்வாறு செய்கின்றாரோ அவருக்கு நாம் விரைவில் மகத்தான பிரதிபலனை வழங்குவோம். (4:114)

((வத்தகுல்லாஹ்)) எல்லா விடயங்களிலும் அல்லாஹ்வை பயப்படுவதும், குறிப்பாக சகோதரத்துவத்தை பேணுவதிலும், நல்லிணக்கப்படுத்துவதிலும் அல்லாஹ்வை பயப்படுவதாகும்.அப்படி நடக்கும் போது அல்லாஹ்வின் அருள் கிடைக்கும். அதனை இழக்கும் போது அது சோதனையாக ஆகிவிடும்.

இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை ( அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள்; நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து; அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்;.... (3:103)

இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்; (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள்; உங்கள் பலம் குன்றிவிடும்; (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (8:46)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا يَسْخَرْ قَوْمٌ مِنْ قَوْمٍ عَسَى أَنْ يَكُونُوا خَيْرًا مِنْهُمْ وَلَا نِسَاءٌ مِنْ نِسَاءٍ عَسَى أَنْ يَكُنَّ خَيْرًا مِنْهُنَّ وَلَا تَلْمِزُوا أَنْفُسَكُمْ وَلَا تَنَابَزُوا بِالْأَلْقَابِ بِئْسَ الِاسْمُ الْفُسُوقُ بَعْدَ الْإِيمَانِ وَمَنْ لَمْ يَتُبْ فَأُولَئِكَ هُمُ الظَّالِمُونَ (11)

முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம்; (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும்; எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள். (49:11)

## வசன எண் பதினொன்று தரும் படிப்பினை;

((யாஅய்யுஹல்லதீன ஆமனூ லாயாஸ்கர் கொவ்முன் மின் கொவ்மின் அஸா அன்யகூனூ கைரம் மின்ஹும், வலா நிஸாஉன் மின் நிஸாஇன் அஸா அன்யகுன்ன கைரன்ம் மின்ஹுன்ன: நம்பிக்கையாளர்களே! ஆண்களில் ஒரு சாரார் மறறொரு சாராரை இழிவாக கருதவேண்டாம், (இழிவாக கருதப்படும்) அவர்கள் ( இழிவுபடுத்தும்) அவர்களைவிட சிறந்தவர்களாக இருக்கலாம். மேலும், பெண்களில் ஒரு சாரார் மறறொரு சாராரை இழிவாக கருதவேண்டாம், (இழிவாக கருதப்படும்) அவர்கள் (இழிவுபடுத்தும்) அவர்களைவிட சிறந்தவர்களாக இருக்கலாம்.))

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் சகோதரத்துவத்தை இல்லாமல் செய்யும் மோசமான சில பண்புகளை தடுக்கின்றான். அவற்றுள் அடுத்தவர்களை கேவலமாக நினைத்தல் என்பது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை இஸ்லாம் பெருமை என்ற பெரும்பாவ பட்டியலிலேயே சேர்க்கும். மேலும் ஒரு மனிதன் செய்கின்ற மிக மோசமான செயலாக வர்ணிக்கின்றது. மேலும் அடுத்தவர்களை கேவலப்படுத்தல் என்பது மிக மோசமான ஒரு செயல் என்பதை புரிந்து கொள்ள இலகுவான ஒரு ஆதாரம் தான், 'முஃமீன்களே என்று விழித்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக

சட்டம் சொல்லும் குர்ஆன் இங்கு பெண்களையும் தனித்து விழித்து' சட்டம் சொல்லியிருப்பதாகும்.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ( ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி ( ஸல்) அவர்கள் "யாருடைய உள்ளத்தில் அணுவளவு பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்" என்று கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், "தமது ஆடை அழகாக இருக்க வேண்டும்; தமது காலணி அழகாக இருக்க வேண்டும் என ஒருவர் விரும்புகிறார். (இதுவும் பெருமையில் சேருமா?)" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் அழகானவன்; அழகையே அவன் விரும்புகின்றான். பெருமை என்பது ( ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும், மக்களைக் கேவலமாக மதிப்பதும்தான்" என்று கூறினார்கள். ((முஸ்லிம்: 147)

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொறாமை கொள்ளாதீர்கள். (பிறரை அதிக விலை கொடுத்து வாங்கவைப்பதற்காக விற்பனைப் பொருளின்) விலையை ஏற்றிக் கேட்காதீர்கள். கோபம் கொள்ளாதீர்கள். பிணங்கிக்கொள்ளாதீர்கள். ஒருவர் வியாபாரம் செய்துகொண்டிருக்கும்போது மற்றவர் தலையிட்டு வியாபாரம் செய்யவேண்டாம். ( மாறாக,) அல்லாஹ்வின் அடியார்களே! ( அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் சகோதரர் ஆவார். அவர் தம் சகோதரருக்கு அநீதியிழைக்கவோ,அவருக்குத் துரோகமிழைக்கவோ, அவரைக் கேவலப்படுத்தவோ வேண்டாம். இறையச்சம் ( தக்வா) இங்கே இருக்கிறது. (இதைக் கூறியபோது) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது நெஞ்சை நோக்கி மூன்று முறை சைகை செய்தார்கள். ஒருவர் தம் சகோதர முஸ்லிமைக் கேவலப்படுத்துவதே அவருடைய தீமைக்குப் போதிய சான்றாகும். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மற்ற முஸ்லிம்களின் உயிர், பொருள், மானம் ஆகியவை தடை செய்யப்பட்டவையாகும். ((முஸ்லிம்: 5010)

அடுத்து, ஒரு மனிதனின் மனநிலை அடுத்தவர்களை கீழ்த்தரமாக பார்க்க சொல்கிறது என்றால், அதனை இல்லாதொழிக்க அல்குர் ஆன் காட்டும் அழகான வழியே; ' (இழிவாக கருதப்படும்) அவர்கள் (இழிவுபடுத்தும்) அவர்களைவிட சிறந்தவர்களாக இருக்கலாம்." என்ற இந்த வழிகாட்டல், ஏன்! உலகில் பட்டங்கள், பதவிகள், சொத்து, செல்வம், ஆட்சி அதிகாரம் போன்ற வெளிப்படைகளை வைத்தே ஒரு மனிதன் சிறப்படைவதும், அடுத்தவர்களை மட்டம்தட்டுவதும், ஆனால் இவைகளில் அல்லாஹ் ஏற்றத்தாழ்வு வைத்திருப்பது பெருமையடிப்பதற்கல்ல, மாறாக ஒருவர் ஒருவரின் மூலம் பயனடைந்து உலகம் நிம்மதியாக செல்வதற்கே, எனவே ஒரு மனிதன் அல்லாஹ்விடம் சிறந்தவனாக வேண்டுமா " யாராலும் தீர்ப்பு வழங்க முடியாத, வெளித்தோற்றத்திற்கு விளங்காத, உள்ளம் சார்ந்த இறையசத்தைக் கொண்டே" ஆகமுடியும் எனும்போது, அல்லாஹ்விடம் தான் சிறந்தவனா, அடுத்தவன் சிறந்தவனா என்று தெரியாத நாங்கள் எப்படி அடுத்தவர்களை மட்டம் தட்டலாம் என்று சிந்தித்தால் இந்த குர்ஆன் வசனத்தை அழகாக நடைமுறைப்படுத்தி, சகோதரத்துவத்தை கட்டிக்காக்கலாம்.

உமது இறைவனின் ரஹ்மத்தை ( நல்லருளை) இவர்களா பங்கிடுகிறார்கள்? இவர்களுடைய உலகத் தேவைகளை இவர்களிடையே நாமே பங்கிட்டு இருக்கிறோம்." இவர்களில் சிலர், சிலரை ஊழியத்திற்கு வைத்துக் கொள்ளும் பொருட்டு, இவர்களில்

சிலரை, சிலரைவிட தரங்களில் நாம் உயர்த்தி இருக்கிறோம்; உம்முடைய இறைவனின் ரஹ்மத்து அவர்கள் சேகரித்து வைத்துக் கொண்டிருப்பதை விட மேலானதாகும். (43:32)

மனிதர்களிடம் கேவலமாக பார்க்கப்படும் ஒருவர் அல்லாஹ்விடம் நெருக்கமாக இருக்கலாம்!

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (புழுதி படிந்த) பரட்டைத் தலை கொண்ட, வீட்டுவாசல்களில் தடுத்து நிறுத்தப்படக்கூடிய எத்தனையோ பேர், (அல்லாஹ்விடம் தகுதியால் உயர்ந்தவர்கள் ஆவர்.) அவர்கள் அல்லாஹ்வின் மேல் ஆணையிட்டு (எதையேனும்) கூறுவார்களானால், அல்லாஹ் அதை மெய்யாக்குவான். (முஸ்லிம்: 5116)

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘மக்கள் நாசமாகிவிட்டனர்" என்று ஒருவர் கூறினால், அவர்களைவிட அவரே மிகவும் நாசமடைந்தவர் ஆவார். (முஸ்லிம்: 5117)

ஸஹ்ல் இப்னு ஸஃத்(ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு ( பணக்கார) மனிதர் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அருகில் சென்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள் (தம் தோழர்களிடம்), 'இவரைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்கவும், இவர் பரிந்துரைத்தால் அதனை ஏற்கவும், இவர் பேசினால் செவிசாய்க்கப்படவும் தகுதியான மனிதர்'' என்று கூறினர். பிறகு நபி(ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். பிறகு, நபி(ஸல்) அவர்கள் அருகில் முஸ்லிம்களில் ஓர் ஏழை மனிதர் சென்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'இவரைக் குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்காமலும், இவர் பரிந்துரைத்தால் அது ஏற்கப்படாமலும், இவர் பேசினால் செவிதாழ்த்தப்படாமலும் இருக்கத் தகுதியானவர்'' என்று கூறினர். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , 'அவரைப் போன்ற (வசதி படைத்த)வர்கள் இந்தப் பூமி நிரம்ப இருந்தாலும் (அவர்கள் அனைவரையும் விட) இந்த ஏழையே மேலானவர்' எனக் கூறினார்கள். (புஹாரி: 5091,6447)

முஸ்அப் இப்னு ஸஃத்(ரலி) அவர்கள் கூறினார்கள்: (என் தந்தை) ஸஃத் இப்னு அபீ வக்காஸ்(ரலி), தமக்குப் பிறரை விட ஒரு சிறப்பு இருக்க வேண்டும் எனக் கருதினார்கள். எனவே நபி(ஸல்) அவர்கள், 'உங்களிடையேயுள்ள பலவீனர்களின் (சாமானிய மக்களின்) பொருட்டால் தான் உங்களுக்கு (இறைவனின் தரப்பிலிருந்து) உதவி கிட்டுகிறது, ஆகாரம் அளிக்கப்படுகின்றது' என்று கூறினார்கள். (புஹாரி: 2896)

((வலா தல்மிஸூ அன்புஸகும்; நீங்கள் ஒருவரையொருவர் ( கண்சாடைகளாலோ, வாய்ப் பேசுக்களாலோ) குத்திக்காட்டாதீர்கள்.))

ஒரு முஸ்லிமின் குறைகளை குத்திக்காட்டி பேசுவது, கண்களால் சாடை செய்து கேவலப்படுத்துவது தடுக்கப்பட்டதாகும். அது முஸ்லிம்களுக்கிடையில் விரோதங்களையும், குரோதங்களையும் வளர்க்கும் ஒரு விடயமாகும், நபிகளார்

காலத்தில் முஃமீன்களை கேவலப்படுத்த இந்த வழியையும் கையாண்டார்கள் காபிர்கள் அதனை ஒரு முஸ்லிம் செய்யக்கூடாது என்பது இறைக்கட்டளை.

குறை சொல்லிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான். (104:1)

(அத்தகையவன்) குறைகூறித்திரிபவன், கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன். (68:11)

நிச்சயமாக, குற்றமிழைத்தார்களே அவர்கள், ஈமான் கொண்டவர்களைப் பார்த்து (உலகில்) சிரித்துக் கொண்டிருந்தார்கள், 30, அன்றியும், அவர்கள் அண்மையில் சென்றால், (ஏளனமாக) ஒருவருக்கொருவர் கண்சாடை செய்துகொள்வார்கள்.31. இன்னும் அவர்கள் தம் குடும்பத்தார்பால் திரும்பிச் சென்றாலும், (தாங்கள் செய்தது பற்றி) மகிழ்வுடனேயே திரும்பிச் செல்வார்கள்.32. மேலும் அவர்கள் ( முஃமின்களைப்) பார்த்தால், “நிச்சயமாக இவர்களே வழி தவறியவர்கள்” என்றும் கூறுவார்கள். (83:30-32)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃமின் குத்திக்காட்டுபவனாக இருக்கமாட்டான்...... (திர்மிதீ:1977)

((வலா தனாபஸூ பில் அல்காப், பிஃசலிஸ்முல் புஸூகு பஃதல் ஈமான்; நீங்கள் ஒருவரை ஒருவர் பட்டப்பெயர் சொல்லி அழைக்க வேண்டாம், இமான் கொண்ட பின்னர் மோசமான பெயராக அது இருக்கிறது.))

இந்த வசனம் இறங்கியதற்கான காரணம் (ஸபபுன் னுஸூல்)

அபூ ஜபீரா பின் ளஹ்ஹாக் ரலி அவர்கள் கூறினார்கள்: எங்களில் ஒரு மனிதருக்கு இரண்டு, மூன்று பெயர்கள் இருக்கும், சிலவேளை ஒருவர் வெறுக்கும் பெயர் கொண்டு அழைக்கப்படுவார், அதன்போதே " வலா தானாபாஸூ ..." என்ற வசனம் இறங்கியது. (திர்மிதீ: 3268)

பொதுவாக இஸ்லாத்தில் ஒருவர் பல பெயர்களை வைத்துக்கொள்ளலாம், அதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது, அந்த வகையில் ஒருவரை அடையாளப்படுத்த பிறப்பின் போது வைக்கப்படும் பெயர் ( அல் இஸ்ம் முஹம்மத் நபிகளாரின் பெயர்), ஒருவர் பிள்ளைகளுடன் சேர்த்து அழைக்கப்படும் புனைப் பெயர் ( குன்யத் அபுல் காஸிம் நபிகளாரின் புனைப் பெயர்), அடையாள பெயர்கள் பட்டப் பெயர்கள் ( அல் மாஹி, அல் ஆகிப் போன்ற நபிகளாரின் பெயர்கள்) என்று பெயர்களை வகைப்படுத்தலாம். இதில் ஒரு மனிதனை கேவலப்படுத்தும் நோக்கில், ஒரு மனிதனின் தவறுகளை வெளிப்படுத்தும் நோக்கில் பட்டப்பெயர்கள் வைத்து அழைப்பது பாவமாகும், அடையாளத்திற்காக சொல்வதில் தவறில்லை. நபி ஸல் அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் சக்ர் என்ற நபித்தோழரை அபூ ஹுரைரா என்று அழைத்ததை குறிப்பிடலாம்.

((வமன் லம் யதுப் பஉலாஇக ஹுமுல் ளாலிமூன்; யார் தவ்பா செய்து மீழவில்லையோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள்.))

முன்னாள் சொல்லப்பட்ட தவறுகள் ஒருவரிடத்தில் இருந்தால் அதனை விட்டொதுங்குவதும், தவறு செய்திருந்தால் மன்னிப்பு தேடுவதும் ஒரு முஃமின் மீது கடமையாகும், அப்படி செய்தால் அவன் குற்றவாளியாக கருதப்பட்ட மாட்டான். மாறாக யார் அந்த பாவத்தில் தொடர்சியாக ஈடுபடுகின்றாரோ, அல்லது மன்னிப்பு தேடாமல்

இருக்கின்றாரோ அவர் செய்யும் செயல் அவரை அநியாயக்காரனாக அடையாளப்படுத்தும்.

எவர்கள் அறியாமையினால் தீமை செய்துவிட்டு, பின்னர் விரைவில் மன்னிப்புத் தேடி கொள்கிறார்களோ அவர்களுக்குத்தான் அல்லாஹ்விடத்தில் மன்னிப்பு உண்டு. அல்லாஹ் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். இன்னும் அல்லாஹ் நன்கறிந்தோனும். ஞானம் உடையோனுமாக இருக்கின்றான்.18. இன்னும் எவர்கள் தீவினைகளைத் (தொடர்ந்து) செய்து கொண்டேயிருந்து, முடிவில் அவர்களை மரணம் நெருங்கிய போது, "நிச்சயமாக இப்பொழுது நான் (பாவங்களுக்காக வருந்தி) மன்னிப்புத் தேடுகிறேன்" என்று கூறுகின்றார்களோ, அவர்களுக்கும், எவர் காபிர்களாகவே மரணிக்கிறார்களோ அவர்களுக்கும் பாவமன்னிப்பு இல்லை, இத்தகையோருக்குத் துன்பம் கொடுக்கும் வேதனையையே நாம் சித்தப்படுத்தி வைத்துள்ளோம். (4:17,18)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيرًا مِنَ الظَّنِّ إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ وَلَا تَجَسَّسُوا وَلَا يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ تَوَّابٌ رَحِيمٌ (12)

முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள்; அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன்.

(49:12)

## வசன எண் பண்ணிரண்ண்டு தரும் படிப்பினை;

((யா அய்யுஹல்லதீன ஆமானு ஜ்தனிபூ கஸீரம் மினல் ழன்னி இன்ன பஃஅல் ழன்னி இஸ்முன் வலா தஜஸ்ஸஸூ, வலா யஃதப் பஃளுகும் பஃளா, அயுஹிப்பு அகதுகும் அய்யஃகுல லஹ்ம அகீஹி மைதன் பகரிஹ்துமூஹ், வத்தகுல்லாஹ் இன்னல்லாஹ தவ்வாபுர் ரஹீம். நம்பிக்கை கொண்டோரே! ( சந்தேக) எண்ணங்களில் அதிகம் தவிர்ந்துகொள்ளுங்கள், ஏனெனில் எண்ணங்களில் சில பாவமாகும், மேலும், (பிறர் குறைகளை) தேடாதீர்கள், மேலும் உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம், உங்களில் ஒருவர் தன் சகோதரன் மரணித்திருக்கும் நிலையில் அவரது மாமிசத்தை சாப்பிட விரும்புவாரா, அதை நீங்கள் வெறுப்பீர்கள் அல்லாவா, மேலும் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள், நிச்சியமாக அவன் பாவங்களை அதிகம் மன்னிப்பவனும், கருணைமிக்கவனுமாவான்.))

இந்த வசனம் மனித சமூகத்தில் பிரிவினையை, வெறுப்பை உண்டுபண்ணும் மூன்று வகையான பாவங்களை தடுக்கின்றது, அவை ஒரு முஃமினின் வாழவில் இருக்கக் கூடாது என்கிறது.

1- அடுத்தவர்களை பற்றிய தப்பெண்ணம், என்றால் அடுத்தவர்களின் செயல்களுக்கு, நடவடிக்கைகளுக்கு ஒருவர் தன் உள்ளத்தால் வடிவம் கற்பிப்பது, காரணம் கற்பிப்பது. உதாரணமாக; ஒருவரின் பேச்சை நாமாக இதற்குத்தான் பேசினார் என்றும், ஒருவரது சிரிப்பை என்னை இழிவுபடுத்தவே சிரித்தார் என்றும் நாமாக முடிவெடுப்பது.

இப்படி ஒரு மனநிலை எமக்குள் வராமல் இருக்கவே அதிகமாகவே அல்லாஹ் அந்த செயலில் இருந்து தவிர்ந்து நடக்க சொல்கிறான்.

அடுத்து அப்படி ஒரு நிலை நம் உள்ளத்தில் ஏற்பட்டால் சம்பந்தப்பட்டவரிடம் தெளிவைக் கேட்பதே அந்த பாவத்திலிருந்து எம்மை பாதுகாக்கும். அதேபோல் அடுத்தவரின் செயலுக்கு நல்லது நினைத்துவிட்டு போவோம் அது எம்மை பாதுகாக்கும். இல்லையென்றால் நமது தப்பான எண்ணம் காலப்போக்கில் எம்மிடையே பகைமையை விரோதத்தை வளர்த்துவிடும், அல்லாஹ் எம்மை காப்பானாக.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: " إِيَّاكُمْ وَالظَّنَّ فَإِنَّ الظَّنَّ أَكْذَبُ الْحَدِيثِ، உங்களுக்கு வீண் சந்தேகத்தை எச்சரிக்கிறேன், ஏனெனில் சந்தேகம் கொள்வதே பேச்சில் மிகவும் பொய்யானதாகும். (புஹாரீ :5143, 6064, முஸ்லிம்)

உமர் ( ரலி) அவர்கள் கூறுவார்கள்: நாலாதாக நினைப்பதற்கு இடம்பாடு இருக்கும் போது, உனது சகோதரனிடமிருந்து வரும் வார்த்தையை நல்லதாகவே அன்றி நினைக்காதே. (அஹ்மத்: ஸுஹ்த் என்ற புத்தகம்)

அதேநேரம் அடுத்தவர்கள் உள்ளத்தில் தப்பெண்ணம் வராத வகையில் நடப்பதும் ஒரு முஃமின் மீது கடமையாகும், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் உடனே அதற்கான தெளிவை கொடுப்பதும் அடுத்தவர்கள் நம்மை தப்பாக நினைப்பதில் இருந்து பாதுகாக்கும்.

ஸபிய்யா(ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் ( இஃதிகாப்) இருந்தார்கள். அவர்களுடன் அவர்களின் மனைவியரும் இருந்துவிட்டுத் திரும்பினர். அப்போது நபி(ஸல்) அவர்கள் என்னிடம், 'அவசரப்படாதே!' நானும் உன்னோடு வருகிறேன்' என்றார்கள். என் அறை உஸாமாவின் வீட்டிற்குள் இருந்தது. நபி(ஸல்) அவர்கள் என்னுடன் வெளியே வந்தார்கள். அப்போது, அன்ஸாரிகளைச் சேர்ந்த இருவர் நபி(ஸல) அவர்களைச் சந்தித்து, அவர்களைக் கூர்ந்து பார்த்துவிட்டுக் கடந்து சென்றனர். நபி(ஸல்) அவர்கள் அவ்விருவரையும் நோக்கி, 'இங்கே வாருங்கள், இவர் (என் மனைவி) ஸபிய்யாவே ஆவார்!' எனக் கூறினார்கள். அவ்விருவரும் 'ஸுப்ஹானல்லாஹ் - இறைத்தூதர் அவர்களே!' என்று ( வியப்புடன்) கூறினார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் ரத்த நாளங்களில் ஓடுகிறான்; உங்கள் உள்ளங்களில் அவன் தவறான எண்ணங்களைப் போட்டு விடுவான் என நான் அஞ்சினேன்' என்று தெளிவுபடுத்தினார்கள். (புஹாரி: 2038, 2039, முஸ்லிம்)

2- அடுத்தவர்களின் குறைகளை தேடுவது தடுக்கப்பட்டதாகும், ஏன் இதுவும் காலப்போக்கில் நம் மத்தியில் விரிசலை ஏற்படுத்தும், அடுத்தவர்களைப் பற்றி தப்பெண்ணம் கொள்ள காரணமாக இருக்கும்.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: ( பிறர் மீது) கெட்ட எண்ணம் கொள்வது குறித்த உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், கெட்ட எண்ணம் தான் பேச்சுகளிலேயே மிகவும் பொய்யானதாகும். (மற்றவர்களின் குற்றங் குறைகளை) துருவித் தருவி ஆராயாதீர்கள். ஒட்டுக்கேட்காதீர்கள். ஒருவரோடொருவர் பகைத்துக்கொள்ளாதீர்கள். ( அல்லாஹ்வின் அடியார்களே!) சகோதரர்களாய் இருங்கள். (புஹாரி: 5143,6064, முஸ்லிம்)

நபி ( ஸல்) அவர்கள் கூறியதாக முஆவியா ( ரலி) அவர்கள் கூறினார்கள்: நீ முஸ்லிம்கள் குறைகளை தேடிச் சென்றால் அவர்களை நீ வீணாக்கிவிடுவாய், அபுத்தர்தா (ரலி) அவர்கள்,; நபிகளாரிடம் முஆவியா அவர்கள் கேட்ட ஒரு வார்த்தை, அதைக்கொண்டு அல்லாஹ் பயனளிப்பானாக. என்று கூறுவார்களாம். (அபூதாவூத்:4888)

ஸைத் பின் வஹ்ப் அவர்கள் கூறினார்கள், இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் ஒரு மனிதர் கொண்டுவரப்பட்டு, இந்த மனிதனின் தாடி மதுவால் கொட்டும், என்று சொல்லப்பட்டது, அப்போது இப்னு மஸ்ஊத் அவர்கள்; துருவித் தேடுவதைவிட்டும் நாம் தடுக்கப்பட்டோம், ஆனாலும் வெளிப்படையாக எம்மிடம் வருவதைக் கொண்டு நாம் தண்டிப்போம். என்று கூறினார்கள். (அபூதாவூத்: 4890)

3- புறம் பேசுவதும் தடுக்கப்பட்ட பெரும்பாவமாகும், புறம் என்று சொல்லும் போது ஒருவரிடம் இருக்கும் குறையை அவர் இல்லாத நேரத்தில், அவர் வெறுக்கும் நிலையில் பேசுவதாகும், அதனை இஸ்லாம் எந்தளவு கண்டிக்கிறது, மனித மாமிசம் சாப்பிடுவதற்கு சமன் என்ற நிலையில் கண்டிக்கிறது. இதற்கு வந்திருக்கும் தண்டனையும் கடுமையானது.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (எங்களிடம்), "புறம் பேசுதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்" என்று பதிலளித்தனர். அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள், "நீர் உம்முடைய சகோதரரைப் பற்றி அவர் விரும்பாத ஒன்றைக் கூறுவதாகும்" என்று பதிலளித்தார்கள். அப்போது, "நான் சொல்லும் குறை என் சகோதரரிடம் இருந்தாலுமா? (புறம் பேசுதலாக ஆகும்), கூறுங்கள்" என்று கேட்கப்பட்டது. அதற்கு அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள், "நீர் சொல்லும் குறை உம்முடைய சகோதரரிடம் இருந்தால்தான், நீர் அவரைப் பற்றிப் புறம் பேசினீர் என்றாகும். நீர் சொன்ன குறை அவரிடம் இல்லாவிட்டாலோ, நீர் அவரைப் பற்றி அவதூறு சொன்னவராவீர்" என்று கூறினார்கள். (முஸ்லிம்: 5048)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதரே சபியா ஒரு (கட்டையான) பெண்ணல்லவா, என்று கையால் சைக்கினை செய்து கூறினேன், அதற்கு நபியவர்கள்; 'நீ சொன்ன அந்த வார்த்தையை கடல் நீரில் கலக்கிவிட்டால், கடல் நீர் மாறிவிடும்.' என்று கூறினார்கள். (திர்மிதீ: 2502, அபூதாவூத்:4875)

இப்னு உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்கள் மினாவில் இருந்தபோது, 'இது எந்த நாள் என்பதை நீங்கள் அறிவீர்களா?' எனக் கேட்டார்கள். அதற்கு மக்கள் 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர்!' என்றனர். உடனே அவர்கள் 'இது புனிதமிக்க தினமாகும்! இது எந்த நகரம் என்பதை நீங்கள் அறிவீர்களா?' என்று கேட்க மக்கள் 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர்!' என்றனர். உடனே அவர்கள் '(இது) புனித மிக்க நகரமாகும்! இது எந்த மாதம் என்பதை அறிவீர்களா?' என்றதும் மக்கள், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர்!' என்றனர். பிறகு நபி(ஸல்) அவர்கள் '(இது) புனிதமிக்க மாதமாகும்!' எனக் கூறிவிட்டு, 'உங்களுடைய இந்த (புனித) நகரத்தில் உங்களுடைய இந்த (புனித) மாதத்தில் உங்களுடைய இந்த நாள் எவ்வளவு புனிதமானதோ அது போன்றே, அல்லாஹ் உங்கள் உயிர்களையும் உடைமைகளையும் உங்கள் மானம் மரியாதைகளையும் புனிதமாக்கியுள்ளான்!' எனக் கூறினார்கள். (புஹாரி:1742, முஸ்லிம்)

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: மிஃராஜின் போது ( தண்டிக்கப்படும்) ஒரு கூட்டத்திற்கு அருகாமையால் நடந்து சென்றேன், அவர்களது நகங்கள் செம்பினால் இருந்தது, அவர்கள் தங்கள் முகங்களையும், நெஞ்சு பகுதியையும் கீறிக்கொண்டிருந்தார்கள், அவர்கள் யார் ஜிப்ரீலே என்று கேட்டபோது, அவர்கள்தான் மனித மாமிசங்களை சாப்பிட்டவர்கள், அவர்களின் மானங்ககளில் குறைகூறியவர்கள். என்று பதில் அளித்தார்கள். (அபூதாவூத்: 4878)

அடுத்து; பொதுவாகவே இஸ்லாம் குறையை புறம் பேசுவதை தடுத்திருந்தாலும், தனிமனித, சமூக, மார்க்க நலனுக்காக குறித்துக் காட்டுவதை இஸ்லாம் அங்கீகரித்துள்ளது.

1- தனி மனித நலன்;

பாத்திமா பின்த் கைஸ் அவர்கள் நபிகளாரிடம், முஆவியா, அபூ ஜஹ்ம் ஆகியோர் திருமணம் பேசி வருவதாக கூறிய போது, நபியவர்கள்: 'அபூ ஜஹ்மோ தான் சாட்டையை கீழே வைக்கமாட்டார், முஆவியாவோ ஒரு ஏழை அவரிடம் பணம் ஏதும் இல்லை என்று கூறினார்கள். (முஸ்லிம்)

2- சமூக நலன்:

ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் ( வீட்டுக்குள் வர) அனுமதி கேட்டார். அவரைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், 'இவர் அந்தக் கூட்டத்தாரிலேயே மிகவும் தீயவர்' என்று ( என்னிடம்) கூறினார்கள். அவர் வந்து அமர்ந்தபோது அவரிடம் நபி(ஸல்) அவர்கள் மலர்ந்த முகத்துடன் இதமாக நடந்து கொண்டார்கள். அந்த மனிதர் ( எழுந்து) சென்றதும் நான் ( நபி(ஸல்) அவர்களிடம்) 'இறைத்தூதர் அவர்களே! அந்த மனிதரைக் கண்டதும் தாங்கள் இவ்வாறு இவ்வாறு சொன்னீர்கள். பிறகு அவரிடம் மலர்ந்த முகத்துடன் இதமாக நடந்து கொண்டீர்களே' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'ஆயிஷா! நான் கடுமையாக நடந்து கொண்டதை நீ எப்போதாவது கண்டுள்ளாயா? எவரின் தீங்கை அஞ்சி மக்கள் (அவருடன் இயல்பாகப் பழகாமல்)விட்டு விடுகிறார்களோ அவரே மறுமை நாளில் அல்லாஹ்விடம் அந்தஸ்தில் மிகவும் மோசமானவராவார்' என்று கூறினார்கள். ( புஹாரி: 6032,6131, முஸ்லிம்)

3- மார்க்க நலன்:

சூரத்துல் ஹுஜுராத்தின் ஆறாவது வசனம் கூறுவது போன்று.

அடுத்து, இந்த வசனத்தை அல்லாஹ் முடிக்கும் விதம், அதனை ஒரு முஃமின் முறையாக சிந்தித்தால் முன்னால் சொல்லப்பட்ட எந்த பாவத்தையும் செய்யமாட்டான்.

((வத்தகுல்லாஹ் இன்னல்லாஹ தவ்வாபுர் ரஹீம்; நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள், நிச்சியமாக அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவனாகவும், கருணைமிக்கவனாகவும் இருக்கின்றான்.))

பாவங்களை செய்யாமல் அல்லாஹ்வை பயந்து நடப்பதும், தவறுதலாகவேனும் பாவமிழைத்துவிட்டால் மன்னிப்பு தேடுவதும், அல்லாஹ் மன்னிப்பவன் என்று நம்புவதும் ஒரு முஃமினுக்கு இருக்கவேண்டிய முக்கிய பண்புகளாகும்.

(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.63. அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள். (10:63)

(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது ( ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் ( மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். (03:133)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்': ஓர் அடியார் ஒருபாவம் செய்துவிட்டார். பிறகு 'இறைவா! நான் ஒரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக' என்று பிரார்த்தித்தார். உடனே அவரின் இறைவன். 'என் அடியான் எனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நன்று) நான் என் அடியானை மன்னித்துவிட்டேன்' என்று சொன்னான். பிறகு அந்த அடியார் ( சிறிது காலம்) அல்லாஹ் நாடிய வரை அப்படியே இருந்தார். பிறகு மீண்டும் ஒரு பாவத்தைச் செய்தார். அப்போது அந்த மனிதர் ( மீண்டும்) 'என் இறைவா! நான் மற்றொரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக' என்று பிரார்த்தித்தார். உடனே இறைவன் (இம் முறையும்) 'என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நல்லது.) நான் என் அடியானை மன்னித்துவிட்டேன்' என்று சொன்னான். பிறகு அல்லாஹ் நாடியவரை அந்த மனிதர் அப்படியே ( சிறிது காலம்) இருந்தார். பிறகும் ( மற்றொரு) பாவம் செய்தார். ( இப்போதும் முன்பு போன்றே) 'என் இறைவா! நான் இன்னொரு பாவம் செய்து விட்டேன். எனக்காக அதை மன்னித்து விடுவாயாக' என்று பிரார்த்தித்தார். அதற்கு அல்லாஹ் 'என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (அப்படியானால்) நான் என்

அடியானை மூன்று முறையும் மன்னித்து விட்டேன். இனி அவன் நாடியதைச் செய்து கொள்ளட்டும்' என்று சொன்னான். (புஹாரி: 7507, முஸ்லிம்)

நினச்சியமாகவே அல்லாஹ் எல்லா பாவங்களையும் மன்னிப்பவன், மட்டுமல்லாமல் மன்னிப்பு தேடுவோரைப் பார்த்து அதிக சந்தோசம் அடைகின்றான்.

அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஹதீஸுல் குதஸீ):....... எனது அடியார்களே நீங்களோ இரவு பகலாக பாவம் செய்ப்பவர்கள், நானோ எல்லா பாவங்களையும் மன்னிப்பவன், எனவே என்னிடம் மன்னிப்பு தேடுங்கள்!...... (முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், பகலில் பாவம் புரிந்தவர்கள் பாவமன்னிப்புக் கோருவதற்காக இரவில் தனது கையை நீட்டுகிறான்; இரவில் பாவம் புரிந்தவர்கள் பாவமன்னிப்புக் கோருவதற்காக பகலில் கையை நீட்டுகிறான். சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும் ( யுக முடிவு நாள்)வரை (ஒவ்வொரு நாளும் இவ்வாறு செய்துகொண்டிருக்கிறான்). (முஸ்லிம்: 5324)

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ (13)

நிச்சியமாக நாங்கள் உங்களை ஒரு ஆணிலிருந்தும், ஒரு பெண்ணிலிருந்தும் படைத்து, உங்களை பல குழுக்களாக, கோத்திரங்களாக ஆக்கினோம், நீஙககள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்காக, நிச்சியமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் சிறந்தவர் உங்களில் அதிக இறையச்சம் உள்ளவரே, நிச்சியமாக அல்லாஹ் அறிந்தவனுக்கு, நுணுக்கசாலியுமாக இருக்கிறான் (49:13)

## வசன எண் பதின்மூன்று தரும் படிப்பினை;

((யா அய்யுஹன்னாஸு இன்னா கலக்னாகும் மின் ஸகரின் வஉன்சா , வஜஅல்னாகும் ஷுஊபவ் வகபாஇல லிதஆரபூ, இன்ன அக்ரமாகும் இந்தல்லாஹி அத்காகும், இன்னல்லாஹ அலீமுன் கபீர்; மனிதர்களே! நிச்சியமாக நாங்கள் உங்களை ஒரு ஆணிலிருந்தும், ஒரு பெண்ணிலிருந்தும் படைத்து, உங்களை பல குழுக்களாக, கோத்திரங்களாக ஆக்கினோம், நீஙககள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்காக, நிச்சியமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் சிறந்தவர் உங்களில் அதிக இறையச்சம் உள்ளவரே, நிச்சியமாக அல்லாஹ் அறிந்தவனும், நுணுக்கசாலியுமாக இருக்கிறான்.))

இந்த வசனம் எங்களுக்கு பல விடயங்களை சொல்கின்றது, முதல் விடயம்; அது விளிக்கும் விதம் 'மனிதர்களே! என்பது. பொதுவாக அல்குர்ஆனில் மனிதர்களே என்று அழைப்பு வந்தால் அதன் பிறகு அல்லாஹ்வின் சக்தி, ஆற்றலோடு சம்பந்தப்பட்டதை சொல்வதை பார்க்கலாம், (உ+ம்; 2:21, 4:1, 22:1, ,,,) ஏனெனில் பொதுவாக மனிதர்களில் அல்லாஹ்வை கடவுளாக ஏற்காதவர்கள் அதிகம், மனிதர்களே என்று விளிக்கும் அல்லாஹ் அவனைப் பற்றி தெளிவுபடுத்தவே விரும்புகிறான், இங்கு படைத்தவனை

புரிந்து கொள்வதட்கு மனித படைப்பின் ஆரம்பத்தை சிந்திக்க சொல்கிறான் அல்லாஹ், அதுவே நாங்கள் உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம் என்பது.

அல்குர்ஆன் கூறும் மனித படைப்பின் படித்தரங்கள்;

1- ஆதம் என்ற முதல் மனிதரே அல்லாஹ்வினால் நேரடியாக அவனது கையினால், மண்ணைக் கொண்டு படைக்கப்பட்டார். எனவே மனித இனத்தின் துவக்கம் மண்ணைக் கொண்டது, அதற்கான ஆதாரங்கள் குர்ஆனில் அதிகம்.

"இப்லீஸே! நான் என்னுடைய கைகளால் படைத்தவருக்கு ஸுஜூது செய்வதை விட்டும் உன்னைத் தடுத்தது எது? பெருமையடிக்கிறாயா? அல்லது நீ உயர்ந்தவர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டாயா?" என்று ( அல்லாஹ்) கேட்டான்.38:76. "நானே அவரைவிட மேலானவன்; (ஏனெனில்) என்னை நீ நெருப்பிலிருந்து படைத்தாய்; ஆனால் அவரையோ நீ களிமண்ணிலிருந்து படைத்தாய்" என்று (இப்லீஸ்) கூறினான். (38:75,76)

2- ஆதம் என்ற முதல் மனிதருக்கான ஜோடி அவரின் விலாப்பகுதியில் இருந்து படைக்கப்படுகின்றது, அது ஹவ்வா என்ற முதல் பெண்ணாகும்.

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்;..... (4:1)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களின் விஷயத்தில் ( நல்ல விதமாக நடந்து கொள்ளும்படி கூறும்) என் அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களை நல்லவிதமாக நடத்துங்கள். ஏனெனில், பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறாள். மேலும், விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதி மிகக் கோணலானதாகும். நீ அதை (பலவந்தமாக) நேராக்க முயன்றால் உடைத்து விடுவாய். அதை அப்படியேவிட்டுவிட்டால் அது கோணலாகவே இருக்கும். எனவே, பெண்களின் விஷயத்தில் என் அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். (புஹாரி: 3331,5186, முஸ்லிம்)

3- அவ்விருவரில் இருந்தும், இந்திரியத்தின் மூலம் சந்ததி கடத்தப்பட்டு, மனித சமூகம் பரவுதல், இதற்கான ஆதாரங்களையும் அல்குர்ஆனில் அதிகம் பார்க்கலாம்.

மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்;) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும்; பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம்; உங்களுக்கு விளக்குவதற்காகவே ( இதனை விவரிக்கிறோம்): மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருப்பப்பையில் தங்கச் செய்கிறோம்; பின்பு உங்களை குழந்தையாக வெளிப்படுத்துகிறோம்..... (22:5)

அவனுடைய தோழன் அவனுடன் ( இது பற்றித்) தர்க்கித்தவனாக: "உன்னை மண்ணிலிருந்தும், பின் ஒரு துளி இந்திரியத்திலிருந்தும் படைத்து, பின்பு உன்னைச் சரியான மனிதனாக ஆக்கினானே அவனையா நீ நிராகரிக்கின்றாய்?" என்று அவனிடம் கேட்டான். (18:37)

4- ஈஸா நபியவர்கள் அல்லாஹ்வின் அற்புதமாக, ஆணின் துணையின்றி மர்யம் என்று பெண்ணுக்கு பிறந்தார்கள்.

அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப் பின் "குன்" (ஆகுக) எனக் கூறினான்; அவர் ( மனிதர்) ஆகிவிட்டார்.,(நபியே! ஈஸாவைப் பற்றி) உம் இறைவனிடமிருந்து வந்ததே உண்மையாகும்; எனவே ( இதைக் குறித்து) ஐயப்படுவோரில் நீரும் ஒருவராகிடாதீர். (3:59,60)

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள்; நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸா மஸீஹ் அல்லாஹ்வின் தூதர் தான்; இன்னும் ("குன்" ஆகுக என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார்; அதை அவன் மர்யமின்பால் போட்டான்; (எனவே) அவரும் அவனிடமிருந்து (வந்த) ஓர் ஆன்மா தான்; ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொள்ளுங்கள்; (4:171)

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணையாளன் யாருமில்லை. முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவேன்; (இறைத் தூதர்) ஈசா ( அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய அடிமையின் புதல்வரும் ஆவார்; அல்லாஹ் மர்யமை நோக்கிச் சொன்ன (" ஆகுக" எனும்) ஒரு வார்த்தை(யில் பிறந்தவர்); அவனிடமிருந்து ( ஊதப்பட்ட) ஓர் உயிர்; சொர்க்கம் உண்மை; நரகம் உண்மை என்றெல்லாம் யார் உறுதிமொழி கூறுகின்றாரோ அவரைச் சொர்க்கத்தின் எட்டு வாசல்களில் தான் நாடிய வாசல் வழியாக அல்லாஹ் நுழைவிப்பான். (புஹாரி:3435, முஸ்லிம்)

மறுமையில் நடக்கும் ஒரு நிகழ்வாக நபியவர்கள் கூறும் போது, மனிதர்கள் நபிமார்களிடம் செலவார்கள்...... அவ்வாறே மக்கள் ஈசா(அலை) அவர்களிடம் சென்று, 'ஈசாவே! நீங்கள் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறீர்கள். மர்யமிடம் இறைவனிட்ட அவனுடைய வார்த்தையும் அவன் ( ஊதிய) உயிரும் ஆவீர்கள். நீங்கள் தொட்டிலில் சிறுவராய் இருந்தபோதே மனிதர்களிடம் பேசினீர்கள். ( எனவே,) எங்களுக்காக உங்களுடைய இறைவனிடம் பரிந்து பேசுங்கள். நாங்கள் ( சிக்கிக்கொண்டு) இருக்கும் (அவல) நிலையை நீங்கள் கவனிக்கவில்லையா?' என்று கேட்பார்கள். அதற்கு ஈசா(அலை) அவர்கள், 'என் இறைவன் இன்று (என் மீது கடும்) கோபம்கொண்டுள்ளான். இதற்கு முன் அவன் இதைப்போல் கோபம் கொண்டதில்லை. இதற்குப் பிறகும் இதைப் போல் அவன் ஒருபோதும் கோபம் கொள்ளப்போவதுமில்லை - (தாம் புரிந்துவிட்டதாக) எந்தப் பாவத்தையும் அவர்கள் குறிப்பிடாமல் - நான் என்னையே காப்பாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது! நான் என்னையே காப்பாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது! ( எனவே,) நீங்கள் வேறெவரிடமாவது சொல்லுங்கள்; நீங்கள் முஹம்மதிடம் செல்லுங்கள்' என்று கூறுவார்கள். ..... (புஹாரி:4712)

அடுத்து,நீங்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்காக உங்களை பல குழுக்களாக, கோத்திரங்களாக ஆக்கினோம்; என்ற சொற்றோடர்கள் மூலம் மனித சமூகத்திற்கு

மத்யிதில் காணப்படும் ஏற்றத்தாழ்வு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகின்றாள் அல்லாஹ்,

எப்படி, பிறப்பில் ஒரே ஆணையும் பெண்ணையும் அடிப்படையாகக் கொண்ட மனிதன், இந்திரியத்துளியால் உருவாக்கப்பட்டு, தாயின் கற்பாறையில் வளர்ந்து அங்கிருந்து ஒரே வழியால் உலகிற்கு வரும் மனிதன், தன் வாழக்கை ஓட்டத்தில் ஏற்படும் மாற்றங்களால் எப்படி ஒருவனை ஒருவன் சிறப்படையலாம். உலகில் உள்ள பட்டங்களும், பதவிகளும், கோத்திரங்களும், குழுக்களும் இந்த உலகம் சீராக நடப்பதற்கேயன்றி ஒருவரை ஒருவர் ஏற்றத்தாழ்வு கற்பித்து உலகை நாசப்படுத்துவதற்கல்ல என்ற தத்துவமே. இதை மனித சமூகம் கடைபிடிக்காத வரை மனித சமூகம் நிம்மதி பெறமுடியாது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனிதனின் குல வேறுபாட்டைக்கொண்டோ, கோத்திரங்களைக் கொண்டோ, பட்டம் பதவிகளைக் கொண்டோ மனிதர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வு கற்பிக்க கூடாது என்பதில் கவனம் செலுத்துகின்றது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை யாருக்கு இஸ்லாத்தில் தெளிவிருக்குமோ, இறையச்சம் இருக்குமோ அவரையே அல்லாஹ்விடத்தில் சிறந்தவராக கணிக்கும் அல்லாமல், உலகில் அதைக் கொண்டு மனிதனை வேறுபடுத்தக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றது, அதனையே அந்த வசனத்தின் பின் பகுதி சுட்டிக்காட்டுகின்றது.

நிச்சியமாக உங்களில் மதிப்பிற்குரியவர் உங்களில் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுபவரே!

அபூ ஹுூரைரா(ரலி) அவர்கள் கூறியதாவது: 'இறைத்தூதர் அவர்களே! மக்களில் கண்ணியத்திற்குரியவர் யார்?' என்று (நபி(ஸல்) அவர்களிடம்) கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், 'அவர்களில் இறையச்சமுடையவரே' என்று பதிலளித்தார்கள். மக்கள், 'நாங்கள் இதைப் பற்றி உங்களிடம் கேட்கவில்லை' என்றனர். உடனே, நபி(ஸல்) அவர்கள், 'அப்படியென்றால் அல்லாஹ்வின் தூதரான யூசுஃப் அவர்கள் தாம் (மக்களில் கண்ணியத்திற்குரியவர்கள்)' என்று கூறினார்கள். (புஹாரி:3490)

முஸ்லிமின் 4740 அறிவிப்பில்; அபூஹுூரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! மக்களில் மிகவும் கண்ணியத்திற்குரியவர் யார்?" என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள், "மனிதர்களிலேயே இறைவனை அதிகமாக அஞ்சுபவர்தான்" என்று பதிலளித்தார்கள். உடனே மக்கள், "நாங்கள் தங்களிடம் இதைப் பற்றிக் கேட்கவில்லை" என்று கூறினர். நபி ( ஸல்) அவர்கள், "அப்படியென்றால், இறைவனின் உற்ற நண்பர் (இப்ராஹீம்) உடைய புதல்வரான இறைத்தூதர் (இஸ்ஹாக்) உடைய புதல்வரான இறைத்தூதர் (யஅகூப்) உடைய புதல்வரான இறைத்தூதர் யூசுஃப் (அலை) அவர்கள்தான்" என்று பதிலளித்தார்கள். மக்கள், "இதைப் பற்றியும் நாங்கள் தங்களிடம் கேட்கவில்லை" என்று கூறினர்.

உடனே நபி ( ஸல்) அவர்கள், "அரபியரின் மூலகங்கள் ( எனப்படும் அரபியர் பரம்பரைகள்) குறித்தா என்னிடம் கேட்கிறீர்கள்? அறியாமைக் காலத்தில் மக்களில் சிறந்தவர்களாயிருந்தவர்கள் தான் இஸ்லாத்தை ஏற்ற பின்பும் சிறந்தவர்களாயிருப்பார்கள்; அவர்கள் மார்க்க ஞானத்தைப் பெற்றுக்கொண்டால்" என்று பதிலளித்தார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சியமாக அல்லாஹ் உங்கள் உடல் கட்டமைப்பையோ, உங்கள் தோற்றங்களையோ பார்க்க மாட்டான், மாறாக, உங்கள் செயல்களையும், உள்ளங்களையுமே பார்க்கிறான். இரு கூறி, தன் நெஞ்சின் பக்கம் தன் விரல்களால் சைகை செய்தார்கள். (முஸ்லிம்)

இந்த வசனத்தை முடிக்கும் முகமாக அல்லாஹ் அவனின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுகின்றான், அவன் அனைத்தையும் அறிந்தவனும் நுணுக்கமானவனுமாவான். இதன் மூலம் அல்லாஹ் என்ன சொல்லவருகின்றான் என்றால் நாம் வெளிப்படையாக மனிதர்களுக்கு மத்தியில் ஏற்றத்தள்வு கட்பித்தாலும் அத்தனையும் அல்லாஹ் அறிவான், உள்ளத்தால் அந்த பாவத்தை செய்தாலும் அதனையும் அல்லாஹ் நுணுக்கமாக அறிந்து கொள்வான் என்பதே, அல்லாஹ்வின் இந்த ஆற்றலை சரியாக புரிந்தவன் அந்த பாவத்தை ஒருபோதும் நெருங்கமாட்டான். அல்லாஹ் நம்மை அப்படிப்பட்ட நல்ல மனிதர்களாக ஆக்குவானாக.

قَالَتِ الْأَعْرَابُ آمَنَّا قُلْ لَمْ تُؤْمِنُوا وَلَكِنْ قُولُوا أَسْلَمْنَا وَلَمَّا يَدْخُلِ الْإِيمَانُ فِي قُلُوبِكُمْ وَإِنْ تُطِيعُوا اللَّهَ وَرَسُولَهُ لَا يَلِتْكُمْ مِنْ أَعْمَالِكُمْ شَيْئًا إِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ (14)

“நாங்களும் ஈமான் கொண்டோம்” என்று (நபியே! உம்மிடம்) நாட்டுப் புறத்து அரபிகள் கூறுகிறார்கள், “நீங்கள் ஈமான் கொள்ளவில்லை. எனினும் “நாங்கள் வழிபட்டோம்” (இஸ்லாத்தைத் தழுவினோம்) என்று (வேண்டுமானால்) கூறுங்கள் (என நபியே! அவர்களிடம்) கூறுவீராக. “ஏனெனில் உங்களுடைய இதயங்களில் (உண்மையான) ஈமான் நுழையவில்லை; மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின் அவன் உங்களுடைய நற்செய்கைகளில், எதையும் உங்களுக்குக் குறைக்க மாட்டான்” நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன். (49:14)

## வசன எண் பதின்நான்கு தரும் படிப்பினை;

((காலதில் அஃராபு ஆமன்னா, குல்லம் துஃமினூ, வலாகின் கூலூ அஸ்லம்னா, வலம்மா யத்தகுலில் ஈமானு பீ குலூபிகும், வஇன் துதீஉல்லாஹ வரஸூலுஹூ லா யலித்கும் மின் அஃமாலிகும் ஷைஆ இன்னல்லாஹ கபூருர் ரஹீம்,; அஃராபுகள் (நாட்டுப் புற அரபிகள்) " நாங்கள் ஈமான் கொண்டு விட்டும்" என்று கூறினார்கள், நபியே நீங்கள் சொல்லுங்கள், "நீங்கள் இன்னும் ஈமான் கொள்ளவில்லை, மாறாக "நாங்கள் கட்டுப்பட்டு நடக்கும் (முஸ்லிமாகிவிட்டோம்)" என்று கூறுங்கள், இதுவரை உங்கள் உள்ளங்களில் ஈமான் நுழையவில்லை. நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்தால் அவன் உங்கள் செயல்களின் கூலிகளில் எதனையும் குறைக்க மாட்டான். நிச்சியமாக அல்லாஹ் மன்னிப்பவனும், இறக்கமுள்ளவனாகவும் இருக்கின்றான்.))

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹ் சொல்ல வருவது; புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நாட்டுப்புற அரபிகள் தங்களிடமும் பூரண ஈமான் இருப்பதாக (மமதையுடன்) கூறும் போதே, ஈமான் நிரம்பிய நிலைக்கு வராதவர்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ளுமாறு ஏவுகின்றான். ஏனெனில் ஈமான் என்பது உள்ளம் சார்ந்தவை மட்டுமே, இஸ்லாம் எனும் போது அது விரிவானது, அதில் நம்பிக்கையுடன்,

வெளிப்படையான செயல்களும் வரும். எனவே செயல்களால் இஸ்லாத்தை காட்டும் நிலையில் இருந்த அவர்களை முஸ்லிம்கள் என்றே சொல்லுமாறு ஏவுகின்றான், அதனால் தான் அல்லாஹ் தொடர்ந்து, இன்னும் அவர்களது உள்ளத்தில் ஈமான் உறுதியாக பதியவில்லை என்று கூறியதுடன், அவர்களது அமல்களுக்கு கூலி தருவதாகவும் குறிப்பிடுகிறான். புஹாரி இமாம் போன்ற சில அறிஞர்கள் கூறியது போன்று அவர்கள் முனாபிக்குகள் அல்லர், அவர்கள் முனாபிக்குகளாக இருந்திருந்தால் கண்டிக்கப்பட்டிருப்பார்கள். எத்தனையோ மனிதர்கள் அமல்களில் ஆர்வம் காட்டினாலும் நம்பிக்கையில் ஆட்டம் கண்டவர்களாகவே இருப்பதை இன்றும் பார்க்கிறோம். (அல்லாஹு அஃலம்) (இப்னு கஸீரின் விளக்க குறிப்பும் சேர்ந்தது)

முஸ்லிமுக்கும் முஃமினுக்கும் இடையில் நபிகளார் வித்தியாசப் படுத்தியிருப்பதைக் காணலாம்.

'நபி(ஸல்) அவர்களுடன் நான் அமர்ந்திருந்தபோது, நபி(ஸல்) ஒரு குழுவினருக்குக் கொடுத்தார்கள். ஒருவரைவிட்டுவிட்டார்கள். அவர் எனக்கு மிகவும் வேண்டியவராவார். அப்போது நான், 'இறைத்தூதர் அவர்களே! ஏன் அவரைவிட்டு விட்டீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக அவரை நான் இறைநம்பிக்கையாளர் என்றே கருதுகிறேன்' என கேட்டதற்கு, 'அவரை முஸ்லிம் என்றும் சொல்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.' சிறிது நேரம் நான் மவுனமாக இருந்தேன். தொடர்ந்து நான் அவரைப் பற்றி நான் அறிந்திருந்த விஷயத்தை என்னையும் மீறி மீண்டும் மீண்டும் கூறினேன். அதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பழைய பதிலையே கூறிவிட்டு, 'ஸஃதே! நான் ஒரு மனிதருக்குக் கொடுக்கிறேன்; ஆனால் நான் கொடுக்காதவர் என்னிடம் மிக நேசமானவராக இருக்கிறார். ( அவருக்கு நான் கொடுத்ததற்கு) காரணம், ஏதும் கொடுக்காதிருந்தால் ( குற்றம் இழைத்து அதனால்) அவரை இறைவன் நரகில் முகம் குப்புறத் தள்ளி விடுவானோ என்ற அச்சம் தான்' என்றார்கள்' என ஸஃத்(ரலி) அவர்கள் அறிவித்தார்கள். (புஹாரி: 27,1428, முஸ்லிம்)

இங்கு உள்ளத்தில் ஈமான் பதிந்த முஸ்லிமுக்கும், ஈமான் பதியாத முஸ்லிமுக்கும் இடையில் வித்தியாசமாக கையாண்டார்கள் நபியவர்கள்.

எனவே முஃமீன்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருக்கும் வித்தியாசத்தை இன்னும் தெளிவுபடுத்தும் முகமாக தொடர்ந்து முஃமீன்களின் பண்புகள் பற்றி எடுத்துரைக்கிறான் அல்லாஹ்!.

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرَسُولِهِ ثُمَّ لَمْ يَرْتَابُوا وَجَاهَدُوا بِأَمْوَالِهِمْ وَأَنْفُسِهِمْ فِي سَبِيلِ اللَّهِ أُولَئِكَ هُمُ الصَّادِقُونَ (15)

முஃமீன்கள் என்றால் அவர்கள் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நம்பிய பிறகு சந்தேகமே கொள்ளமாட்டார்கள், மேலும் அல்லாஹ்வின் பார்வையில் தங்கள் உடலாலும், பொருளாலும் போராடுவார்கள், அவர்களே உண்மையாளர்கள். (49:15)

## வசன எண் பதினைந்து தரும் படிப்பினை;

((இன்னமல் முஃமினூனல்லதீன ஆமனூ பில்லாஹி வரஸூலிஹி சும்ம லம் யார்தாபூ, வஜாஹது பிஅம்வாலிஹிம் வஅன்புஸிஹிம் பீ ஸபீலில்லாஹி உலாஇக ஹுமுஸ் சாதிகூன்; முஃமீன்கள் என்றால் அவர்கள் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நம்பிய பிறகு சந்தேகமே கொள்ளமாட்டார்கள், மேலும் அல்லாஹ்வின் பார்வையில் தங்கள் உடலாலும், பொருளாலும் போராடுவார்கள், அவர்களே உண்மையாளர்கள்.))

இந்த வசனத்தில் அல்லாஹ் உண்மை முஃமீன்களின் இரண்டு முக்கிய பண்புகளை சுட்டிக்காட்டுகின்றான், ஒன்று அவர்கள் தங்கள் நம்பிக்கையில் சந்தேகம் கொள்ளாமல் உறுதியாக இருப்பார்கள். ஜிஹாத் எனும் போராட்டத்திட்கு அழைக்கப்பட்டால் பின்வாங்கமாட்டார்கள். அவர்கள் வெறுமனே வெளிவார்த்தைகளுடனும், சாதாரண அமல்களுடனும் போதுமாக்கி கொள்ளமாட்டார்கள். (இப்னு கஸீர் சுருக்கம்)

இதனை இன்னும் இலகுவாக புரிந்துகொள்ள பின்வரும் நபிமொழியை நோக்கலாம்.

புரைதா பின் அல்ஹஸீப் அல்அஸ்லமீ (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு படைக்கோ அல்லது படைப் பிரிவுக்கோ தளபதி ஒருவரை நியமித்தால்,தனியாக அவரை அழைத்து இறைவனை அஞ்சுமாறும் அவருடன் இருக்கும் முஸ்லிம்களின் நலனைப் பேணுமாறும் அறிவுறுத்துவார்கள். பிறகு, பின்வருமாறு அறிவுரை கூறுவார்கள்: இறைவனின் பெயரால், இறைவனின் பாதையில் போரிடுங்கள். இறைவனை மறு(த்து உண்மைக்கு எதிராக நட)ப்பவர்களுடன் போராடுங்கள்; அறப்போர் புரியுங்கள்; போர்ச் செல்வங்களில் கையாடல் செய்யாதீர்கள்; ஒப்பந்தங்களை முறிக்காதீர்கள்; அங்கஹீனம் செய்யாதீர்கள்; குழந்தைகளைக் கொல்லாதீர்கள்; உம்முடைய எதிரிகளான இணைவைப்பாளர்களை நீர் சந்தித்தால் மூன்று அம்சங்களின் பக்கம் அவர்களை அழைப்பீராக.

அவற்றில் எந்த ஒன்றை ஏற்றுக்கொள்ள அவர்கள் முன்வந்தாலும் அவர்களிடமிருந்து அதை ஏற்பீராக; நடவடிக்கையை நிறுத்தி விடுவீராக. பிறகு அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுப்பீராக! அதை அவர்கள் ஏற்றுக்கொண்டால், அவர்களிடமிருந்து அதை ஏற்று, அவர்கள்மீது நடவடிக்கையை நிறுத்திவிடுவீராக.

பிறகு அவர்களை (அவர்கள் வசிக்கும்) அந்த ஊரிலிருந்து முஹாஜிர்கள் (நாடு துறந்தோர்) வசிக்கும் பகுதிக்கு வந்து குடியேறுமாறு அழைப்பீராக. மேலும், அவர்களிடம் " இவ்வாறு நீங்கள் செய்தால் முஹாஜிர்களுக்குக் கிடைக்கும் சாதகங்களும் முஹாஜிர்களுக்கு ஏற்படும் பாதகங்களும் உங்களுக்கும் உண்டு" என்று தெரிவித்துவிடுவீராக.

அங்கிருந்து இடம்பெயர அவர்கள் மறுத்தால் அவர்களிடம் கூறிவிடுங்கள்: <u>முஸ்லிம்களில் நாட்டுப்புறத்தாரைப் போன்றுதான் நீங்களும் இருக்க வேண்டும்; மற்ற இறைநம்பிக்கையாளர்களுக்குப் பொருந்தும் அனைத்து இறைச்சட்டங்களும் உங்களுக்கும் பொருந்தும்.போர்ச் செல்வங்கள் (ஃ கனீமத்) மற்றும் போரிடாமல் கிடைத்த (ஃ பய்உ) சொத்துகள் எதுவும் உங்களுக்குக் கிடைக்காது; முஸ்லிம்களுடன் இணைந்து அறப்போர்களில் ஈடுபட்டால் தவிர (அப்போது மட்டுமே அவர்களுக்கு</u>

அச்செல்வங்கள் கிடைக்கும் என்று கூறிவிடுங்கள்). அதற்கும் அவர்கள் மறுத்தால் அவர்களிடம் "ஜிஸ்யா" காப்புவரியைக் கோருக....... (முஸ்லிம்: 3566)

இங்கு நபிகளார் ஹிஜ்ரத் செய்து வருவோரை மு.:.மீன்கள் பட்டியல் என்றும், ஹிஜ்ரத் செய்து வராதவர்கள் முஸ்லிம்களில் அக்ராபுகள் என்றும் வித்தியாசப் படுத்துகின்றார்கள்.

قُلْ أَتُعَلِّمُونَ اللَّهَ بِدِينِكُمْ وَاللَّهُ يَعْلَمُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ (16) يَمُنُّونَ عَلَيْكَ أَنْ أَسْلَمُوا قُلْ لَا تَمُنُّوا عَلَيَّ إِسْلَامَكُمْ بَلِ اللَّهُ يَمُنُّ عَلَيْكُمْ أَنْ هَدَاكُمْ لِلْإِيمَانِ إِنْ كُنْتُمْ صَادِقِينَ (17)

“நீங்கள் உங்கள் மார்க்க (வழிபாடுகள்) பற்றி அல்லாஹ்வுக்கு அறிவிக்(க விரும்பு)கிறீர்களோ? அல்லாஹ்வோ வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் நன்கு அறிகிறான் - அன்றியும், அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் நன்கறிகிறவன்” என்று (நபியே!) நீர் கூறும். 17அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால், உமக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதுகிறார்கள்; “நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால் எனக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதாதீர்கள்; எனினும், நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் ஈமானின் நேர் வழியில் உங்களைச் சேர்த்ததனால் அல்லாஹ் தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கிறான்” என்று (நபியே!) நீர் கூறுவீராக. (49:16,17 )

## வசன எண் பதினாறு, பதினேழு தரும் படிப்பினை;

((குல் அதுஅல்லிமூனல்லாஹ பிதீனிக்கும், வல்லாஹு ய.:.லமு மா பிஸ்ஸமாவாதி வமா பில்அர்ல், வல்லாஹு பிகுல்லி ஷைஇன் அலீம்; யமுன்னூன அலைக அன் அஸ்லமூ, குல்லா தமுன்னூ அலய்ய இஸ்லாமாகும், பலில்லாஹு யமுன்னு அலைக்கும் அன் ஹதாகும் லில் ஈமான், இன் குந்தும் சாதிகீன். “நீங்கள் உங்கள் மார்க்க ( வழிபாடுகள்) பற்றி அல்லாஹ்வுக்கு அறிவிக்(க விரும்பு)கிறீர்களோ? அல்லாஹ்வோ வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் நன்கு அறிகிறான் - அன்றியும், அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் நன்கறிகிறவன்” என்று (நபியே!) நீர் கூறும். 17 அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால், உமக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதுகிறார்கள்; “நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதால் எனக்கு உபகாரம் செய்து விட்டதாகக் கருதாதீர்கள்; எனினும், நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் ஈமானின் நேர் வழியில் உங்களைச் சேர்த்ததனால் அல்லாஹ் தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கிறான்” என்று ( நபியே!) நீர் கூறுவீராக. (49:16,17 ))

இந்த வசனம் மூலம் அல்லாஹ் அந்த நாட்டுப்புற அரபிகள் என்ன நோக்கத்தில் "நாங்கள் ஈமான் கொண்டோம்" என்று சொன்னார்கள் என்பதனை தெளிவுபடுத்துகின்றான். அதைத்தான் நபிகளாருக்கு அல்லாஹ் " நீங்கள் ஈமான் கொண்டுவிட்டீர்கள்" என்று சொல்லிக்காட்டுவதன் மூலம் உங்கள் மார்க்கப் பற்றை அல்லாஹ்வுக்கு சொல்லிக் கொடுக்க பார்க்கின்றீர்களா." என்று கேட்க சொல்கிறான். அல்லாஹ்வோ அவனுக்கு வானம் பூமியிலுள்ள எதுவும் மறையாது, அவன்

அனைத்தையும் அறிந்தவன், என்றிருக்க அவனுக்கே பாடம் புகட்டுவதைக் கண்டிக்கிறான்.

அடுத்து அவர்கள் " நாங்கள் ஈமான் கொண்டோம்" என்று சொன்னதன் இன்னொரு நோக்கத்தை அல்லாஹ் படம் பிடித்துக் காட்டுகின்றான், அதுதான்; அவர்கள் ஈமான் கொண்டிருப்பதும், நபிகளாரை பின்பற்றுவதும், உதவி செய்வதும் நபிகளாருக்கு செய்யும் உபகாரமாக எடுத்து சொல்கின்றனர், (உதாரணமாக நம் இல்லையென்றால் உமக்கு முன்னேற முடியாது என்பது போன்று), அதட்குத்தான் அல்லாஹ் நபிகளாருக்கு "நீங்கள் இஸ்லாத்தில் இருப்பது எனக்கு உபகாரம் என்று சொல்லிக்காட்ட வேண்டாம், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியிருப்பது அல்லாஹ் உங்களுக்கு செய்திருக்கும் உபகாரம்" என்று சொல்ல சொல்கிறான், நீங்கள் முஃமீன்கள் என்று சொல்வதில் உண்மையாளர்கள் என்றால் நீங்கள் இப்படி புரிவதே நல்லது என்று அவ்வசனத்தை முடிக்கிறான்.

அப்துல்லாஹ் இப்னு ஸைத் இப்னி ஆஸிம்(ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ், தன் தூதர்(ஸல்) அவர்களுக்கு ஹுனைன் நாளில் போர்ச் செல்வங்களை வழங்கியபோது உள்ளங்கள் இணக்க மாக்கப்பட்ட வேண்டிய (மக்கா வெற்றியின்போது புதிதாக இஸ்லாத்தை; தழுவிய)வர் களிடையே ( அவற்றைப்) பங்கிட்டார்கள். (மதீனாவாசிகளான) அன்சாரிகளுக்கு எதுவும் கொடுக்கவில்லை. மற்றவர்களுக்குக் கிடைத்தது போல் தமக்கும் கிடைக்காமல் போனதால் அவர்கள் கவலையடைந்தவர்களைப் போல் காணப்பட்டார்கள். எனவே, அவர்களிடையே (ஆறுதலாக) நபி(ஸல்) அவர்கள் உரையாற்றினார்கள். (அவ்வுரையில்), 'அன்சாரிகளே! உங்களை வழிதவறியவர்களாக நான் காணவில்லையா?' அல்லாஹ் என் மூலமாக உங்களுக்கு நேர் வழியை அளித்தான். நீங்கள் பிரிந்து (சிதறிக்) கிடந்தீர்கள். அப்போது அல்லாஹ் என் மூலமாக உங்களைப் பரஸ்பரம் நேசமுடையவர்களாக்கினான். நீங்கள் ஏழைகளாக இருந்தீர்கள். அல்லாஹ், என் மூலமாக உங்களைத் தன்னிறைவுடையவர்களாய் ஆக்கினான் ( அல்லவா?)' என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் ( தம் வருகையால் அன்சாரிகள் அடைந்த நன்மைகளை) ஒவ்வொன்றாகச் சொல்லும் போதெல்லாம், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே அதிக உபகாரம் புரிந்தவர்கள்' என்று அன்சாரிகள் கூறினர். நபி(ஸல்) அவர்கள், 'அவ்வாறிருக்க, அல்லாஹ்வின் தூதருக்கு நீங்கள் பதிலளிக்கமாலிருப்பது எதனால்?' என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் ஒன்றைச் சொல்லும் போதெல்லாம் அவர்கள், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே மிகப் பெரும் உபகாரிகள்' என்று கூறினார்கள்...... (புஹாரி: 4330)

உண்மையில் இந்த போதனையை பார்க்கும் போது நாம் முஸ்லிமாக இருக்கிறோம் என்பது எங்களுக்கு தான் அருளே அல்லாமல், இஸ்லாத்திற்கு நாம் தேவையில்லை என்பது தெளிவான ஒரு விடயமாகவும், இந்த அருளின் பெறுமதியை ஒருவன் முறையாக விளங்குவதே அவனை உண்மை முஸ்லிமாக வாழச்செய்யும்.

அடுத்து நாங்கள் உண்மை முஃமீன்களா என்று பரிசோதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம், உண்மை முஃமீன்களுக்கு உள்ள பண்புகள் என்று அல்லாஹ்வும் அவன் தூதரும் எடுத்துச் சொன்ன பண்புகள் எம்மிடம் இருக்கின்றதா, சொந்த நாட்டை இஸ்லாத்திற்காக துறந்து ஹிஜ்ரத் செய்யும் மனநிலை இருக்கின்றதா,

இஸ்லாத்திற்காக போராடும் ஜிஹாத் பற்றிய உணர்வு உள்ளத்தில் இருக்கிறதா, உலகில் அற்பமான நெருக்கடிகளைக் காணும் போது ஈமான் தளராமல் உறுதியாக இருக்கிறதா என்பன போன்ற கேள்விகள் மூலம் எங்களை நாங்கள் சுயபரிசோதனை செய்ய வேண்டு, இந்த சூராவின் மூலம் அல்லாஹ் அதனையே எம்மிடம் எதிர்பார்க்கின்றான், அதனால் இந்த சூராவை முடிக்கும் போது அவனது அறிவின் விசாலத்தை எடுத்துச் சொல்லி முடிக்கிறான்.

إِنَّ اللَّهَ يَعْلَمُ غَيْبَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاللَّهُ بَصِيرٌ بِمَا تَعْمَلُونَ (18)

நிச்சியமாக அல்லாஹ் வானங்கள் பூமியில் மறைந்திருப்பதை அறிபவன், நீங்கள் செய்வதையும் பார்ப்பவன். (49:18)

## வசன எண் பதினெட்டு தரும் படிப்பினை;

((இன்னல்லாஹ யஃலமு கைபஸ் ஸமாவாதி வல்அர்ல், வல்லாஹு பஸீரும் பீமா தஃமலூன்.; நிச்சியமாக அல்லாஹ் வானங்கள் பூமியில் மறைந்திருப்பதை அறிபவன், நீங்கள் செய்வதையும் பார்ப்பவன்.))

வானம் பூமியில் உள்ளவற்றை அறியும் அல்லாஹ் எமது உள்ளத்தில் இருக்கும் ஈமானின் அளவை அறிந்தவனே, எமது செயல்களை அறிபவன் அல்லாஹ் நிச்சியம் ஈமானின் வெளிப்பாட்டை அறிபவன் என்ற ஈமானிய உணர்வு நிச்சியம் இந்த உலகில் எம்மை நல்லவர்களா வாழச் செய்யும், அல்லாஹ் நம் அனைவரையும் இந்த சூராவிலிருந்து நாள்ல பாடங்களையும் படிப்பினைகளை பெற்ற மனிதர்களாக ஆக்குவானாக.

**வஆகிறு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். சூரா ஹுஜுராத் விளக்கம் முற்றுப்பெற்றது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.**